Regd No M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 13-11-1948 சனிக்கிழமை } மலர் 10.

★

## இங்கர்சால் பொன்மொழிகள்.

★

வெண்பா.

கண்மூடிக் கொள்கைகள் காட்டுத்தீ யால்வெந்து
உண்மை புலப்பட்டு ஒண்டொடியே—மண்மீது
எவ்வெவருந் தங்கருத்தை எண்ணியவி தஞ்சொன்னால்
சவ்வா துலகைக் கருப்பு.

எள்ளத் தனையளவு மெண்ணாது நம்பியச்ச
வெள்ளத்தில் போகாதே வேல்விழியே—உள்ளபடி
மண்ணுலகைப் பற்றியே மக்களறிந் தாரில்லை
விண்ணுலக மேனோ விளம்பு.

முந்தைநாள் மூதாதை மூடத்தில் மூழ்கினார்
எந்தையும் கைக்கொண்டார் ஏந்திழையே—அந்த
அறிவற்ற கொள்கை அடிமைத் தனந்தான்
பிறிதொன்று முண்டுகொல் பேசு.

பெண்ணுரிமை இல்லெனப் பேசுகின்ற வேதமதை
கண்ணினும் மிக்கதாய்க் காவரையில்—கண்மணீ
கொன்னே அடிமையாம் கொண்டவன் தன்னிடத்தில்
என்னே மடமை இயம்பு.

—கோல்லிப் பொருப்பன்.

★

சிறுவர் பகுதி.

# பந்த பாசம்

"தாதா"

கடன்காடு என்ற ஊரில் உடங்கட்டை என்று ஒரு வைதீக வாத்தியாயர் இருந்தார். அவர் தன் வீட்டுத் திண்ணையையே ஒரு பள்ளிக்கூடமாக வைத்துக் கொண்டு சில மாணாக்கர்களுக்கு வைதீகக் கல்வி போதித்து வந்தார்.

உடங்கட்டைக்குப் பாசம்என்ற பெயருடைய ஒரு மகன் இருந்தான். அவன்தான் அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் சட்டாம் பிள்ளை. திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவிகளில் காரணியும் ஒருத்தி.

காரணி கொஞ்சம் தாழ்ந்த குலத்தில் பிறந்தவள் என்று கருதப்படுபவளாய் இருந்தாள். ஆனால் உயர்ந்த அறிவும், ஆலோசனையும் உடைய சிறுமியாக விளங்கினாள். சட்டாம்பிள்ளை பாசத்துக்குக் காரணி மீது ஓர் அலாதியான அன்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது; காரணம், காரணி மிகவும் அழகுடையவளாகவும் இருந்ததே.

ஓர் நாள், காரணியும் பாசமும் ஓர் தோட்டத்தில் சந்தித்து ஒருவரை ஒருவர் நேசிப்பதாகப் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் திடீரென்று தோட்டத்திற்குள் புகுந்துவந்த உடங்கட்டையைக் கண்டு இருவரும் திடுக்கிட்டு எழுந்து ஆளுக்கொரு பாதையில் பிரிந்து ஓடிவிட்டனர். அதனால், உடங்கட்டை அவர்கள் அவ்வாறு ஓடியதைக் கண்டு சந்தேகம்கொண்டார்.

மறுநாள் பள்ளிக்கூடத்திற்கு வந்த காரணியைக் கண்டித்து 'இனிமேல் நீ என் பள்ளிக்கூடத்திற்கே வரவேண்டாம்' என்று கூறி விலக்கி விட்டார் உடங்கட்டை. பாசம் காரணியை நினைந்து உருகினான். என்றாலும், உடங்கட்டைக்குப் பயந்து பேசாமல் இருந்து விட்டான்.

சில காலங்கள் கழிந்தன. பாசத்தால் காரணியைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. உடங்கட்டைக்குத் தெரியாமல் மறுபடியும் காரணியைச் சந்தித்தான் பாசம். காரணி 'இனிமேல் இப்படித் திருட்டுத்தனமாகச் சந்திக்க எனக்கு விருப்பமே இல்லை' என்று கூறிவிட்டுப் போக முயன்றாள்.

'உன்னைப் பாராமல் இருக்க என்னால்முடியவில்லையே!' என்று அன்புகனியப் பேசினான் பாசம். 'அப்படியானால், நீ என்னை வெளிப்படையாகக் கலியாணம் செய்து கொள்ளவேண்டும்' என்றாள் காரணி.

'அப்பாவும், அம்மாவும், சுற்றத்தார்களும் சம்மதிக்கமாட்டார்களே! நான் என்ன செய்வேன்?' என்று தயங்கினான் பாசம். 'உனக்கு என்மீது உண்மையான அன்பு இருந்தால், மூடர்களாகிய உன் அப்பா, அம்மா, சுற்றத்தார்கள் எல்லோரையும் உதறித்தள்ள வேண்டியதுதான்' என்று கணீரென விடை கொடுத்தாள் காரணி.

பாசம் மனம் பதறினான். 'காரணி! உன் பெற்றோர்களாயிருந்தால் நீ இப்படிச் சொல்லுவாயா?' என்று கேட்டான்.

'காரணம் இல்லாத காரியமும் இல்லை, காரியம் இல்லாத காரணமும் இல்லை! ஆதலால், யாரா இருந்தாலென்ன? நான் கூறியதுதான் சரியான வழி. இல்லாவிட்டால், நீ வந்தவழியே திரும்பிப் போகலாம்!' என்று ஒரே முடிவாகச் சொல்லிவிட்டாள் காரணி.

பாசத்திற்குக்காரணியின்காரண காரியத் தத்துவ விளக்கம் புரியவில்லை. அதற்கு மாறாகத் தன்னை இழந்தால், தன் பெற்றோர்கள் தம் உயிரையே மாய்த்துக் கொள்வார்கள் என்று விவாதித்தான்.

காரணி பாசத்தின் பேச்சைக் கேட்டுச் சிரித்து விட்டு, 'அடப் பைத்தியமே! ஒரு சோதனை செய்து காட்டுகிறேன் பார்க்கிறாயா?' என்று கேட்டாள். பாசத்திற்குத் தன் பெற்றோர்களும், சுற்றத்தார்களும் தன்மீது வைத்திருக்கும் உயிருக்குயிரான அன்பில் எள்ளளவு அவநம்பிக்கையும் இல்லாதிருந்ததால் காரணியின் சோதனையை ஏற்றுக் கொண்டான்.

காரணி பாசத்திற்கு ஓர் அற்புதப் பச்சிலை மூலிகையைக் கொடுத்து 'ஏ பாசமே! இதை நீ இரவில் படுக்கப் போகும்போது தின்று விட்டுப் படுத்துக் கொண்டால், மறுநாள் காலையில் செத்த பிணம் போல் கிடப்பாய்; ஆனால், பிறர் என்ன பேசுகிறார்களோ அதெல்லாம் உனக்குக் கேட்கும். அறுபது நாழிகைக்குப் பிறகு, நீ எப்போதும் போலாகி விடுவாய்' என்று கூறினாள்.

'நான் செத்து விட்டேன் என்று அறிந்தால் என் பெற்றோர்களும் எனக்காக உயிரை விட்டு விடுவார்களே!' என்று வருந்தினான் பாசம். அந்த மாதிரி அசம்பாவிதம் எதுவும் நேராமல் நான் கவனித்துக் கொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்தாள் காரணி.

பாசம் சம்மதித்து வீட்டுக்குப் போனதும் இரவில் காரணி கொடுத்த மூலிகையைச் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டான். காலையில் எழுந்த பாசத்தின் பெற்றோர்கள் பாசம் பிணமாய்க் கிடப்பதைக்கண்டு கதறி அழுதனர். சுற்றத்தார்களும் வந்து சூழ்ந்து அழுது கொண்டிருந்தனர்.

அப்போது அந்த ஒரு சாது வந்தார். அவரைக் கண்டதும் கூட்டத்திலிருந்து ஒருவன்எழுந்து 'அதோ பந்த சுவாமி வருது! பாதத்தில் விழுந்து வணங்குங்கள் நல்ல பலன் உண்டாகும்' என்று கத்தினான். உடனே பாசத்தின் பெற்றோர்கள் பந்தசுவாமியின் பாதத்தில் விழுந்து வணங்கி 'பந்த சுவாமியே! எங்கள் மைந்தனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கவேண்டும்' என்று வேண்டினர்.

அதற்கு அந்தப் பந்தசுவாமி 'ஏ உடன்கட்டை! உன் மகன் பாசத்தின் உயிரைத் திரும்பப் பெறவேண்டுமானால், பகவானுக்கு மற்றோர் உயிரைக் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும். உங்களில் யாரேனும் ஒருவர் அதற்குச் சித்தமாக இருந்தால் உடனே என்முன் வந்து நிற்கவும்' என்றது.

அதைக்கேட்டு உடன்கட்டையே திடுக்கிட்டுப்போனாரென்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்கவா வேண்டும்? அந்த இழவுக்கு அழுக வந்த ஆணும் பெண்ணும்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

19-வது மாநாட்டில்

# மக்களினம் மாண்புபெற :: :: வள்ளுவர் தந்த குறள்!

★

அக்டோபர் 24ம் நாள்
ஈரோடு மாநாட்டில்
திருவள்ளுவர் படத்தினைத்
திறந்துவைக்கும் முறையில்
திராவிடத்தந்தை
**பெரியார் அவர்கள்**
**பேசிய கருத்துக்கள்!**

## உணர்ச்சியுடன் திறப்பதென்றால்...

உண்மையாகவே உணர்ச்சியுடன் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைப்பதாயிருந்தால் முதலில் கம்பனுடைய படம் ஒன்றைச் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டுப் பிறகுதான் திருவள்ளுவரைப்பற்றிப் பேசத் துவங்க வேண்டும். திருவள்ளுவருடைய கொள்கைகளையும் அவருடைய பாட்டின் அருமையையும் அவற்றால் திராவிட நாடு பெற்றிருக்கவேண்டிய பலனையும் கம்பனது ராமாயணம் அடியோடு கெடுத்துவிட்டது. பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியான கம்பனால் இந்நாட்டில்நிலவியிருந்த திராவிடக்கலாச்சாரமே பாழாக்கப்பட்டுப்போய் விட்டது. ஆரியப்பண்புகளையும் ஆரிய நடைமுறைகளையும் போற்றிப் புகழ்ந்து அவற்றை திராவிட மக்கள் எற்கும்படி அழகுறத் தமிழில் பாடி மக்களை ஏய்த்துவிட்டான் கம்பன்.

## ஏன் திருக்குறள் தோன்றியது?

இராமாயணம், பாரதம், கீதை இன்னோரன்ன ஆரிய நூல்கள் யாவும் திராவிடப்பண்புகளை மறுக்க இயற்றப்பட்ட நூல்கள்தான் என்பதை ஆராய்ச்சி அறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்வார்கள். இவ்வாரிய நூல்களில் வலியுறுத்தப்பட்டுள்ள ஆரியப் பண்புகளுக்கு திராவிடநாடு ஆட்பட்டிருந்த சமயத்தில் திராவிடர்களை அதனின்றும் விடுவிக்கத் திராவிடப் பெரியார் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட நூல்தான் திருக்குறள் ஆகும்.

## வள்ளுவர் குறளும் ஆரிய நூல்களும்.

மக்கள் யாவரும் ஒரே சாதி என்கிறது குறள். மக்கள் 4-ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று பாகுபடுத்திக் கூறுகிறது இராமாயணமும், கீதையும். அறிவுக்கு மாறான, இயற்கைக்கு மாறான பல காட்டு மிராண்டித்தனமான கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு இயங்குகின்றன ஆரிய நூல்கள். அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக்கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்குஒப்ப இயைந்திருக்கக்கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

ஆரிய நூல்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நடந்திருக்கக் கூடாததாகவும் இன்று நடத்திக் காட்ட முடியாதனவாகவும் சாத்திய மற்றதாகவும் இருக்கின்றன. திருக்குறளில் காணப்படும் நீதிகள் அறிவுரைகள் யாவும் நடந்தால் உற்ற பலம் தரக்கூடியதும் ஏற்கக்கூடியதாகவும் இன்றும் நம்மால் நடத்திக் காட்டக் கூடியவையாகவும் இருக்கின்றன.

## நாட்டையாளும் மந்திரிகளுக்கு ராமாயணக் காலட்சேபமா?

நாம் ராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்று திட்டம் போட்டால் அத்திட்டத்தை இன்றும் நம்மவரைக் கொண்டுதான் எதிர்க்கிறது 'ஆரியப் பார்ப்பனீயம். நம்மவர்கள் ஆரியத்தின் கையாட்களாகத்தான் நமக்குத்தொல்லை கொடுக்க முன்வருவார்களே ஒழிய தாமாக இராமாயணம் கொளுத்தப்படுவது பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். இராமாயண பிரசாரமும் கம்பர் விழாவும் முதலில் துவக்கப்பட்டதே நம்மிடமிருந்து சுயநலத்துக்காக ஆரியருக்கு அடிமையான திரு. டி.,எம். நாராயணசாமி பிள்ளையால் ராமாயணப் பிரச்சாரம் செய்யப் பார்ப்பனர்கள் முன் வந்தார்கள்.

பிறகு இப்போது மந்திரிகளே முன் வந்து விட்டார்கள். இதில் ரெட்டியார் முதன்மையானவர். ரெட்டியார் ராமாயணத்தைப் பற்றிய பிரசாரம் செய்யட்டும், மற்றொரு ஆழ்வாராக ஆக இஷ்டமிருந்தால். ஆனால் மந்திரியாக இருந்து கொண்டு அவ்வேலையைச் செய்வது தவறு என்று தான் நான் சொல்கிறேன். நீங்களும் சிந்தித்துப் பாருங்கள், இது தவறல்லவா என்று.

## என்னே ஆரிய சூழ்ச்சி!

கலியாணங்களில்காலட்சேபங்களின் மூலமும் நாடக மேடைகளில் நாடகங்களின் வாயிலாகவும், சினிமாக்களில் படக்காட்சிகளின் மூலமும், பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களின் மூலமும் இந்த இராமாயண, பாரதக்கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு விட்டதன் பயனாய் இன்றும் வலியுறுத்தப்பட்டு வருவதன் பயனாய் நாடாளும் அரசன் முதற்கொண்டு, காட்டிலேயே இருந்து மாடு மேய்த்துப்பிழைக்கும் மாட்டுக்காரப்பையன் வரையும் எல்லோருக்கும் ராமனையும் சீதையையும் தெரிந்திருக்கக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது.

காலஞ்சென்ற ராஜா. சர் அண்ணாமலைச் செட்டியாருக்குக்கூட குறள் தெரிந்திருக்குமோ தெரியாதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இப்படியாக உயர்தத்துவங்களும் அறிஞர்க்கான அறிவுரைகளும் அடங்கிய நூல், பொது மக்களுக்குள் பரவவிடாமல் மறைக்கப்பட்டு இராமாயணமும் பாரதமும் எல்லோருக்கும், கக்கூஸ்காரி வரைக்கும் கூடத்தெரியும்படி விளம்பரப்படுத்தப்பட்டு விட்டது. திராவிடர்களை இழிமக்களென்று வலியுறுத்தும் நூல்கள் போற்றத்தக்க தன்மையைப் பெற்றுவிட்டன. திராவிடர்களைப் பற்றிப் புகழ்ந்து கூறும் நூல்கள் மறைந்திருக்கும்படி செய்யப் பட்டுவிட்டன. என்னே ஆரிய சூழ்ச்சி! என்னே நம்மவர் விபீஷணத் தன்மை!

## ஆரியத்தின் முதல் நூல்.

இராமாயணத்தையும் பாரதத்தையும் எடுத்துக் கொண்டால் இவற்றுள் பாரதந்தான் முந்திய நூலாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். சிலர் ராமாயணந்தான் முந்தியது என்று கருதுகிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். பாரதத்திற்கும் முந்திய நூல்தான் கந்தபுராணம். கந்தபுராணத்தையொட்டி சற்று சிறியதாக தொகுக்கப்பட்டது தான பாரதம் என்று நான் நினைக்கிறேன்.

கந்த புராணந்தான் ஆரியத்திற்கு ஏற்பட்ட முதல் நூல். கந்தபுராணத்தில் காணப்படும் இழி தன்மைகளை சற்று அதிகப்படுத்தியும், மனித வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளைச் சற்று அதிகமாகச் சேர்த்தும் எழுதப்பட்டதுதான் பாரதம். கந்த

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# கதைகண்ட கற்கள்!

போட்டி

எண் 9.

நான் இப்பொழுது உங்களுக்குஅறிமுகப்படுத்தப்போகும் இருவர்களை நீங்கள் பார்க்க விரும்பினால், போன வருஷத்தில், ஏதாவது ஓர் மாதத்தில், ஏதாவது ஓர் தேதியில் காலை 6 மணிக்குள் திருவாரூர் கமலாலயத்தின் எதிரே உள்ள கோபுரவாசலுக்குப் போக வேண்டும். அந்தக் கோபுரவாசலின் உள்ளே இரண்டு நீளக்கற்களைத் தலையணையாக வைத்துக்கொண்டு ஒரு கிழவனும், ஒரு சிறுமியும் படுத்திருப்பார்கள்.

அக்கிழவனுக்கு வயது சுமார் எழுபது இருக்கும், நரைத்த தலையும் தாடியும் உடையவன்; அச்சிறுமிக்குப் பத்து வயது இருக்கும். தண்ணீர் விடாத புடலங்கொடி பட்டுப்போவதைப்போல எண்ணை வாசனையறியாத அவளது தலைமயிர்செம்பட்டையாகி விட்டது.

இந்த சுதந்தர தேசிய சர்க்காரில் இவ்விருவர்கள் செய்யும் தொழிலுக்கு மட்டும் தொழில் வரி கிடையாது. அவர்களுடைய தொழில் பிச்சை எடுப்பது.

அப்பெண் காலையிலெழுந்ததும் முதலிற் செய்யும் வேலை தனக்கும், தன் தாத்தாவுக்கும் தலையணையாக உதவிய கற்களைப் பிறர் கண்ணிற் படாதவாறு கோபுரவாசல் கதவின் ஓரத்தில் ஒளித்து வைப்பது. பிறகு ஓர் கம்பின் நுனியைத்தான் பிடித்துக்கொண்டு மற்றொரு நுனியை அவனிடம் கொடுத்துவிட்டு, பஸ்ஸ்டாண்டுக்கு அவனைக் கூட்டிச்செல்வாள். அங்கு கிழவன் பாட்டுப்பாடிக்கொண்டே பஸ்ஸிலுள்ளவர்களிடம் காசுகேட்பான்.

குடிக்கவும் நீரற்றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்
தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே—தம்பி!
வசம் கெட்டுப்போனது நமது
நன்னாடு

என்று புரட்சிக் கவிஞர்பாரதிதாசன் பாட்டை அவன் உருக்கமாகப்பாடும்போது கல்நெஞ்சுள்ளவனும்கூட ஒரு சொட்டு கண்ணீர் விட்டே தீருவான்.

ஆடுவோமே பள்ளு பாடுவோமே
தமிழர் ஆட்சியில் மாட்சியில்
கூடுவோமே.

என்று அக்கிழவன் பாடும் பொழுது யாருக்குமே சிரிப்பு வந்து விடும். இவ்வாறு பஸ்ஸிலுள்ளவர்களது மனதைக் கவர்ந்து, எப்படியோஒரு அணாச் சேர்த்துவிடுவான். அந்த ஒரு அணாவையும் அவளிடமே கொடுத்துவிடுவான். அந்த ஒரு அணாவைக்கொண்டுதான் அவர்கள் காலை'ஆகாரம் அருந்த வேண்டியிருப்பதால், ஒரு அணாச் சேர்ந்த பின்புதான் அவர்கள் பல் விளக்குவது (ஏனெனில் 'பல் விளக்காவிடில் பசியாது' என்பது அவர்கள் நம்பிக்கை)

ஒரு அணாச்சேர்ந்தவுடன் கமலாலயத்துக்குப்போய் செங்கலைக் கல்லில் தேய்த்துப் பல் விளக்குவார்கள். பிறகு அச்சிறுமி ஒருவரும் தன்னைக் கவனிக்காத சமயம் பார்த்துப் படிக்கட்டிலுள்ள ஓர் இடுக்கில் அந்தச் செங்கலை ஒளித்து வைத்து விடுவாள். அவனுடைய கந்தையையும், தன்னுடையதையும் கசக்கிப் படியில் காயப்போட்டு விட்டு கிழவனுக்குக் குளிப்பாட்டி விடுவாள்; பிறகு தானும் குளிப்பாள். அதற்குள் கந்தைகள் காய்ந்து விடும்; அவைகளை எடுத்து உடுத்திக்கொள்வார்கள். பிறகு கிழவன் அவளது தோளைப் பிடித்துக் கொள்வான்; உடனே அவள் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் ரோடில், தெற்கு ஓரத்தில் சுவரோரம் அய்ந்தாறு பெண்கள் உட்கார்ந்து கொண்டு டப்பா சாதம், கடலை, சுண்டல் முதலியன விற்கிறார்களே, அந்த இடத்திற்கு அவனை அழைத்துச் செல்வாள். அரையணாவுக்குச் சுண்டல் வாங்கி இருவரும் தின்று விட்டுக் கோபுர வாசலை நோக்கி நடப்பார்கள். போகும்போதே அவனுக்காகக் காலணாவுக்குப் பீடி வாங்கித் தன்மடியில் வைத்துக்கொள்வாள்; செலவழிந்தது போக மீதியிருக்கும் தொகையாகிய காலணாவைப்பத்திரமாக முடிந்து வைத்துக் கொள்வாள்.

கோபுர வாசல் வந்ததும் அங்கு அவன் அச்சிறுமியின் மடிமேல் படுத்துக்கொள்வான்; பிறகு முதல் நாள் கேட்ட ரேடியோ, கிராமபோன் பாட்டுகள் முதல், 'சாதம் இல்லை' என்று சொன்ன அம்மாள் வரையிலுமுள்ள சகல சங்கதிகளைப்பற்றியும் சம்பாஷணை நடக்கும்.

சிறுமி: தாத்தா! நமக்குச் சோறு இல்லேன்னு சொல்றவங்களுக்குப் புத்தியே கிடையாது.

கிழவன்: அப்படியெல்லாம் சொல்லாதே கண்ணு, அவுங்க கொடுக்கலேன்னா திட்றதாம்மா?

சிறுமி: இல்லே தாத்தா, அதனாலே இல்லை, நேற்று அந்தப் பெரிய வீட்டிலே பிச்சை கேட்டப்ப அந்தப் பாப்பாத்தியம்மா என்னா சொல்லுச்சு? தெருவிலே போட வந்த எச்சிலையைக் கையில் வச்சிக்கிட்டே 'இன்னும் சாப்பாடு ஆகலை'ன்னு சொல்லுச்சால்லியா? அதுனாலேதான் தாத்தா புத்தியில்லைன்னு சொன்னேன்.

உடனே இருவரும் பலத்த சப்தம் போட்டுச் சிரித்து விட்டு எழுந்திருக்கிறார்கள். கிழவன், அவளது தோளைப் பிடித்துக்கொண்டே,

"நானோர் பரதேசி"

என்று பாடிக்கொண்டு தெப்பக்குளத்தை ஒரு சுற்றுச் சுற்றுகிறான். அதற்குள் அவள் கையிலுள்ள சட்டி நிறைந்து விடுகிறது.

கோபுர வாசலில் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு, அங்கேயே படுத்து நிம்மதியாக அய்ந்து மணிவரை ஒரு தூக்கம் தூங்கி விட்டு எழுந்து 'ரேடியோப் பாட்டு' கேட்பதற்காக முனிசிபல் பார்க்குக்குப் போவார்கள். மீதியிருக்கும் காலணாவுக்கு நிலக்கடலை வாங்கித்தின்று கொண்டே, இரவு 9 மணி வரை ரேடியோக் கேட்டுவிட்டுத்திரும்புவார்கள். திரும்பிவரும் பொழுதே,

"உன்னைக்கண்டு மயங்காத
பேர்களுண்டோ"

என்ற பாடலைப் பாடிக்கொண்டே பிச்சை எடுத்துக்கொண்டு வந்து தெப்பக்குளத்துப் படிக்கட்டில் வைத்துச் சாப்பிட்டு விட்டு, பழைய இடத்திற்குப் படுக்கப்போய் விடுவார்கள். காலையில் ஒளித்து வைத்த கற்களை எடுத்துத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்தார்களானால், மறுநாள் காலை 6 மணிக்குத்தான் எழுந்திருப்பார்கள். இதுதான் அவர்களுடைய 'தினசரி வேலை'.

கிழவனிடம் இவ்வளவு அன்போடிருக்கும் அவள் அவனது சொந்தப் பேத்தியல்ல; அவன் யாரென்று அவ

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

## தோழர்களே.

இதற்குமுன் 8 கதைகளையும்

படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 4 கதை

பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

அரசியல் நிர்ணய சபையில்

# ‘அவர்கள்’ பேசினார்கள் !!!

## இந்தி ஏகாதிபத்தியமா?

### ஆச்சாரியாரின் அறிவுரை.

பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் அவசியமாயினும், மாகாணங்கள் நசிக்காது காப்பதும் அவசியம். தொழிலாளர், சுகாதாரம், ஆகிய விவகாரங்களில் மத்தியத் தலையீடு அனுகூலமாயிருக்கும். இவ்விஷயத்தை எல்லாத் துறைகளிலும் விஸ்தரிக்கக் கூடாது. அதேபோல் மத்திய சர்க்காரில் “பாஷை ஏகாதிபத்தியம்” வலுப்பெற்றது குறித்து எச்சரிக்க விரும்புகிறேன். அய்க்கிய மாகாணம், மத்தியமாகாணம், பீகாரில் இந்தி, பேசும் பாஷையாக இருக்கலாம். ஆனால் இதர இடங்களைப் பற்றியவரை, அங்குள்ளவர் கல்வி அறிவு எந்த மட்டத்திலிருக்கிற தென்பதையும், எவ்வித சுதந்த்ரத்தை நாடுகின்றனர் என்பதையும் புறக்கணிக்கமுடியாது. தென்னாட்டில் ஆங்கிலப் பாஷை மீது துவேஷம் மறைந்து விட்டது. இன்று இந்தி கற்றுக் கொண்டு வந்துதான் இங்கு பேசவேண்டுமெனக் கூறினால் எனக்குக்கூட அது சாத்தியமாகாது. ஆங்கிலத்தை விரட்டும் உத்வேகத்தில், நாட்டில் ஏராளமானவர்களுக்கு இந்தி தெரியாதென்பதை மறக்கலாகாது. இவ்விஷயத்தில் விட்டுக்கோடுக்கும் மனோபாவம் இல்லாவிடில் இந்தி வெறி பிடித்த மத்திய சர்க்கார் அரசாளும் என்ற பயம் ஏற்படுகிறது. தென்னாட்டில் ஏற்கனவேயே பலர் பிரிவினையை விரும்புகின்றனர். அவர்கள் வெற்றி பெறாமற் செய்வது இந்தச் சபையின் கடமை.

[இது சென்னை 6—11—48 ம் நாள் சுதேசமித்திரன் பத்திரிகையில் 6-வது பக்கத்தில் 2-வது கலத்தில் டி. டி. கேயின் சாட்டை என்ற தலைப்பில் காணப்படுவது]

## வேண்டாம் வெறி!

பண்டிட் மயித்ரா பேசுகையில், இந்தி தேசிய பாஷையாக வேண்டுமெனப் பூரா நாடும் ஒப்புக் கொண்டு விட்டதாகவும், தனக்கோ இந்தி தெரியாவிடில் அது அவர்களுடைய தவறில்லையென்றும், கற்க அவர்கட்குப் போதிய அவகாசம் அளிக்க வேண்டுமென்றும், இந்தியில் அரசியல் திட்டம் இல்லாததால் சுதந்தரத்திற்கு அர்த்தமில்லையென வடநாட்டவர் அடிக்கடி வலியுறுத்துவது அபத்தம் என்றும், அவ்விதப பாஷை வெறியைக் கைவிடவேண்டுமென்றும் கூறினார்.

[இதுவும் ஷை பத்திரிகையில் ஷை நாள் ஷை பக்கம் ஷை கலத்தில் ‘பாஷை வெறி வேண்டாம்’ என்கிற தலைப்பின் கீழ் காணப்படுவதாகும்.]

## சட்டத்தால் இந்தியைப் புகுத்தாதீர் !

### சக்கைப்போடு போடுகிறார் நேரு!

தேசிய பாஷைக்கும் இதே வாதங்கள் பொருந்தும். எந்தச் சுதந்தா நாடும் தனது பாஷையையே, தேசிய பாஷையாகக் கொள்ள வேண்டுமென்பது உண்மை. ஆனால் நானும் மூன்னும் இதர பல நண்பர்களும் இங்கு ஆங்கிலத்தில் பேசவேண்டியிருக்கிறதிலிருந்து ஏதோ கோளாறு இருப்பது புலப்படும். அதை உணருவோமாக. உடனடி மாறுதல் வேண்டுமென வலியுறுத்திப் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி, அரசியல் திட்டம் நிறைவேறுவதையே தாமதமாக்க வேண்டாம்.

ஒரு தனி நபர் அல்லது ஒரு நாட்டின் வாழ்வில் பாஷை கேந்திர ஸ்தானம் வகிக்கிறது.

முக்கியமானதாகையால் தீர ஆலோசித்து நாம் முடிவுசெய்ய வேண்டும். முக்கியமானதாகையால் உடனடியாகக்கவனிக்க வேண்டிய விஷயமும் ஆகும். ஆனால் இங்கு அவசரப்பட்டால் காரியம் கெட்டு விடும். நான் கூறுவது முன்னுக்குப் பின் முரணாயிருப்பதாகத் தோன்றும். ஏனென்றால் ஒரு முக்கிய விஷயத்தில் மெஜாரிட்டி ஓட்டுகளால் மைனாரிட்டிகள் மீது எதையாவது திணித்தால் நமது லட்சியம் ஈடேறாது. ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திய பாஷையையோ அல்லது பல்வேறு பகுதிகளில் அந்தந்த பாஷைகளையோ அமுலாக்கப் பலம் வாய்ந்த சக்திகள் வேலை செய்கின்றன. ஒரு விஷயத்தை விரும்பாத மக்கள்மீது அதைத் திணிக்க முயற்சித்தால் கடும் எதிர்ப்பு இருப்பதோடு, முயற்சியாளர்களின் விருப்பத்திற்கு நேர் மாறான நிலைமை ஏற்படுவதும் சகஜம்.

ஆகையால் சரியான சமயத்தில் இப்பிரச்னைக்குப் பரிகாரம் காண வேண்டும். இயற்கையான அகில இந்தியப் பாஷையைத் தீர்மான மூலமோ, சட்ட மூலமோ அபிவிருத்தி செய்யமுடியாது. லட்சியம் ஈடேறக் கடும் உழைப்பு தேவை. எது அகில இந்தியப் பாஷையாக இருக்கவேண்டும் என்பது பற்றி எனக்கும் மற்றவர்களுக்கும் அபிப்பிராய பேதமிருக்கலாம். அதற்காக என் யோசனையைப் பிறர்மீது நான் திணிக்க மாட்டேன். பிறர் ஒத்துழைப்புடன் சுமுகமாக லட்சியத்தை யடைய வேலை செய்வேன்.

[இது சென்னை 9—11—48-ம் நாள் மித்திரனில் 4-வது பக்கம் 2-வது கலத்தில் ‘தேசிய பாஷை சர்ச்சை’ என்ற தலைப்பின் கீழ்

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 26ம் நாள் போர்.

சென்னை நவ 5.

வழக்கம்போல் முத்தியாலுப் பேட்டை கிளைப் பள்ளியின் முன்பு 9-30-முதல் 10-30-வரை மறியல்.

தொண்டர்கள், தோழியர் அலமேலு அம்மையார் தோழர்களான கலைச்செல்வன், சாளைகபீர், ஓ. வி பாண்டியன், சி. எஸ். திராவிடமணி ஆகிய மூந்திய அய்வருமே.

மாணவர்களில் பாதிப்பேர் இன்றும் பள்ளிக்கூடம் வரவில்லை.

மறியல் செய்யும தொண்டர்களை மக்கள் அணுகாதபடி போலீஸ் தடுத்தும் பயன்படாததால் போக்கு

## உடலைப் பலப்படுத்த உறுப்புகளுக்குப் பலவீனமா?

மத்திய சர்க்காரை பலமுள்ள தாக்கும் பொருட்டு மாகாணங்கள், சமஸ்தானங்கள் போன்ற சமஸ்டி அங்கங்கள் பலவீனமாக்கப் பட்டு விட்டதென்றும், குறிப்பாகத் திருவாங்கூர்தன் வருமானத்தில் 45 சத விகிதத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுக்கவேண்டி நேருமென்றும், முதன் முதல் பேசிய தோழர் சங்கரன் [திருவாங்கூர்] முறையிட்டார். இந்தியைக் கற்கத் தென்னிந்தியா கிழக்கிந்தியா மக்களுக்கு இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு அவகாசம் அளிக்கப் படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

[இது ஷை பத்திரிகையில் ஷை நாள் 1-வது பக்கத்தில் 5-வது கலத்தில் காணப்படுவது]

## 20-ஆண்டு வரை இந்தியென்றே பேசாதீர்!

சென்னை நவ 9.

எல்லா மாகாணங்களுக்கும் மத்ய நிர்வாகத்துக்குமாக ஒரே பாஷை அவசியம் என்று வற்புறுத்தி மிகவாதிகள் சம்மேளனத் தலைவர் தோழர் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சாஸ்திரியார் கூறியிருப்பதாவது:— இந்திய யூனியனின் உத்தியோக முறையான தேசிய பாஷை ஹிந்தி என்பதை ஒப்புக்கொண்டு, தென்னிந்தியாவின் உத்தியோக முறையான பாஷை நான்கு பாஷா பிரதேசங்களிலும் அந்தந்தப் பிரதேசத்தில் ஸ்தல பாஷையாகவே இருக்கவேண்டுமென்று இப்போது டில்லியில் உள்ள தென்னிந்தியப் பிரதிநிதிகள் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய ஏகமனதான முடிவாக அ-நி சபைக்கு அறிவிக்கப்படலாம். இது விவேகமற்ற முடிவு என்பது என் கருத்து. தேசம் முழுவதுக்கும் ஒரே பாஷைதான் இருக்கவேண்டும். மேற்படி முடிவினால் நிர்வாகத்துறையில் குழப்பமே [illegible]

மாகாணங்களிலும் மத்தியிலும் சட்ட மியற்றுவதற்கான பாஷை எதாக இருக்கவேண்டும்? ஹை கோர்ட்டுகளின் பாஷை எதாக இருக்கவேண்டும்? வழக்குகளின் நுணுக்கங்கள் சம்பந்தமான சட்ட ரிப்போர்ட்டுகள் இருக்க வேண்டுமா? இருக்கவேண்டுமானால் அவை எந்த பாஷையில் இருக்கவேண்டும்? ஹைகோர்ட்டுகளின் பாஷைகள் வெவ்வேறாக இருக்குமானால் ஒரு ஹைகோர்ட்டின் அபிப்பிராயங்களை இன்னொரு ஹைகோர்ட் அறிவது எப்படி. பாஷை விவகாரத்தில் ஒரு இடத்துக்கு மட்டும் சுதந்தரம் கொடுக்க முடியுமா?

ஹிந்தி தேச பாஷைக்கு உள்ள ஸ்தானத்தை வகிப்பதற்குத் தகுதியாகும் வரையில் அரசியல் நிர்ணய சபையின் பாஷை ஆங்கிலமாகவே இருக்கவேண்டும். தற்போது ஆங்கிலம் வகிக்கும் நிலைமைக்கு ஹிந்தி வரும் வரையில் அதை ஆங்கிலத்துக்குப் பதிலாக உபயோகிக்க முடியாது. கல்வித்துறையில் ஹிந்திக்கு அதிக ஆக்கம் அளித்தால் தான் அது விரைவில் வியாபகமடையும். குறைந்தது 20 வருஷங்களிலாவது ஹிந்தியை நாம் தேச பாஷையாக உபயோகிக்கக்கூடிய நிலைமையை எய்தவேண்டும். மாகாணங்களுக்கும் சரி, மத்தியிலும் சரி, ஒரே பாஷை இருக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் வற்புறுத்தியது ரொம்ப சரி.

[இது ஷை பத்திரிக்கையில் 1-வது பக்கத்தில் 7-வது கலத்தில் காணப்படுவதாகும். அ-நிசபைக்குத் தோழர் சாஸ்திரியாரின் ஆலோசனை இது]

★

## அறிவிப்பு.

காங்கயத்தில் பழையகோட்டைப் பட்டக்காரர் உயர்நிலைப்பள்ளி அர்ச்சுனன் உணவு விடுதி ஆகியவை அமைக்கும் உதவிநிதிக்காக அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் "சந்திரமோகன்" என்னும் நாடகம் 21—11—48 தேதி ஈரோட்டில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது. திடீரென மத்தியநிதிக் குழுவின் தலைவராக இருந்த பெரியார் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள் கார்விபத்துக்குள்ளாகி மறைந்துவிட்ட காரணத்தால் ஷை நாடகத்தை டிசம்பர் மாதத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பொது மக்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

என். இ. பாலகுரு
கன்வீனர்
நிதிக்குழு உபகமிட்டி, ஈரோடு.

## போதுமா?

'திராவிடம்' என்கிற சொல் பிராமி மொழியிலும் இருக்கிறது. பிராமி மன்னன் நிக்கலஸ் ஆட்சிச் சரித்திரத்தில் திராவிடர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஸ்மிருதியிலும் பஞ்சத் திராவிடம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மலையாளம், தமிழகம், ஆந்திரம், கேரளம், அவற்றோடு மாராத்தி தேசம் ஆகிய அய்ந்து திராவிடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மலையாள தேசத்தில் பிறந்து வளர்ந்து வடமொழி கற்று சவுந்தர்ய லகரி என்ற சமஸ்கிருத நூல் எழுதிய சங்கராச்சாரியாரும் அப்புததகத்தில் திராவிடர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எல்லையப்பர் அவர்களின் மொழி பெயர்ப்பின் மூலம் நாம் இதை அறியலாம்.

சுமார் 55-ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த சபாபதி நாவலர் என்கின்ற தமிழ் வாணரால் எழுதப்பட்ட திராவிடப் பிரகாசிகை என்கின்ற நூலிலும் திராவிடம் என்கின்ற வார்த்தைக்குப் பல ஆதாரங்கள் காட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இன்று இந்நாட்டின் தேசியப்பாட்டாக வழங்கி வரும் ஜனகணமனவிலும் கவி ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் "திராவிட உட்கல வங்கா" என்ற வரியில் திராவிட நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

திராவிட நாடு என்று ஒரு நாடு தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறதென்பதற்கு இவ்வாதாரங்களே போதும் என நினைக்கிறேன்.

—திரு. வி. க.

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 27-ம் நாள் போர்.

சென்னை நவ 8.

இன்றும் வழக்கம்போலவே அய்யரின் மறியல். தொண்டர்கள் மறியலை முடித்துத் திரும்பிச்செல்லும் போது பொதுமக்கள் பின்தொடர்ந்து செல்வதைப் போலீசார் தடுத்து தொலைவில் செல்லும்படி செய்தனர்.

நூலகம் ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# பாசறை நோக்கிச் செல்!

[✶]

செல். வேகமாகச்செல். வெகு வேகமாகச்செல். வீறுகொண்டு செல். பண்டைப்பெருமையையெண்ணிப் பார்த்துச்செல். தமிழ் நாட்டைக் காப்பாற்றப் போகிறேன் என்று எண்ணிச்செல். அமைச்சரால் அடிமைப் படுத்தப்பட்ட தமிழ் அன்னையை விடுவிக்கச் செல். செல். விரைந்து செல்! குறைகூறும் குள்ளர்களுக்கு நிறையறிவு நல்கச்செல். வாளெடுத்துச் செல். வாகை சூடியே தீருவேன் என சபதம் செய்து செல். உயிர் கொடுக்கத்தயங்காதுசெல். ஒரு தமிழனுயிர் போக்க ஒரு போலீஸ், ஒரு துப்பாக்கி, ஒருதுண்டு அவசியம்தேவையிருக்கும் ஆளவந்தார்க்கென அறிக்கை விடுத்துச்செல். அறப்போருக்கென அண்ணா அமைத்திருக்கும் அணிமிகு பாசறை நோக்கிப்பயமின்றிச் செல்! போர்க்களம் நோக்கிச் செல். செல் விரைவில்.

அட தமிழா! உன்முன்னோர் தான், கனகவிசயனின் தலையிலே கல்லேற்றியது. உன் முன்னோர் தான் கடவுளை (!) காலால் உதைத்தது. உன் முன்னோர்தான் இமயத்தில் தமிழ்க் கொடி நாட்டியது. உன் முன்னோர்தான் ரோமாபுரியிலே, கடல் கடந்த சீமையிலே வாணிபம் செய்து நற்பெருமை பெற்றது. உன்முன்னோர் தான் தமிழ் வளர வழிசெய்தது. ஆகவே இன்றைய நிலையுணர்ந்து கண் விழி!

தமிழ்நாடு என்றால் உலகிலேயே தனிமதிப்பு இருந்த அந்தக்காலம் எங்கே? உலகத்துக்கே பொது மறையான குறளை ஆக்கிய வள்ளுவன் பெருமை எங்கே? கொடைக்காகத் தன் உயிரையே கொடுத்த கொல்லிமலை ஓரியின் களிமிகு காலம் எங்கே? சிலப்பதிகாரம் எழுதி செந்தமிழைச் சீர் செய்த சேரன் இளங்கோவன் நற்புகழோச்சிமகிழ்ந்த அந்தக் காலம் எங்கே? இவை அத்தனையும் இன்று இந்தியின் அடிமை. எண்ணிப்பார்! ஒரு காலத்தில் நீ மன்னன். இப்போது உன்னை மடையனாக்குகிறது இந்தி: அதன் இறுமாப்பைப்பார்! விழித்தநீ வீறுகொண்டு எழு!

இலக்கண இலக்கியத்துடன் நன்னித்தமிழிருக்க, கவிதை, காவியத்துடன் கன்னல் தமிழிருக்க, எழுத்தும் பேச்சுடன் இசைத்தமிழிருக்க, நாவலன் காவலனுடன் நற்றமிழிருக்க, அன்பு மொழிபேசி இன்பம் பாய்ச்சும் அன்னை தமிழிருக்க, எல்லாம் அறிந்தவர் போல் நடித்த அமைச்சர், காமத்துப் பாலை நீக்க வேண்டுமென்று கதறியழுத கல்வியமைச்சர், இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்யும் தமிழ்ப் பண்டிதர்களை 'டிஸ்மிஸ்' செய்வேன் என்று திமிர் வாதம் பேசும் குதர்க்கவாதி, தமிழர்களாற் சிறந்து, தமிழரையே அழிக்க எண்ணும் அய்யோ அனுதாபம் அவினாசியார், இந்தி கொண்டு வரும் செய்கையைக் கண்டு சீறி எழு!

சீறி எழுந்தும் செயலிழந்து நில்லாதே! பிரகலாதனைக்கெடுக்க சித்ரபானு வந்தாற்போல, இராவணனைக் காட்டிக்கொடுக்க விபீஷணன் வந்தாற்போல, வாலியைக் கொல்ல சுக்ரீவன் வகைசெய்து காட்டினாற்போல, ஏதாவதொன்று வரலாம். எல்லோருமே சதுர மேஜை மகாநாடு கூட்டி வரலாம். எதிர்ப்புப் பீரங்கிகளைக் கொண்டு வரலாம். அப்போது நீ ஊக்கமில்லான் ஆக்கவேலையில் ஈடுபட்டாற்போல நிற்கக்கூடாது என்பதை நெஞ்சில் நிறுத்து!

144-வரலாம். 288-வரலாம். வெள்ளிக்காப்பு வரலாம். சிறைக்கோட்டம் புக நேரிடலாம். தடியடி வரலாம். துப்பாக்கி முனை வரலாம். பீரங்கிகள் வரலாம். தூக்குமேடையே வரலாம். ஏன்? நம் பொதுமக்கள் சர்க்கார் (!) மகா சக்திவாய்ந்த அணுக்குண்டையே கொணரலாம். அள்ளி வீசலாம் உன்மேல்! அஞ்சாதே! விரைந்து செல்! மறப்போர் வீரனே, களம் நோக்கிச் செல்! அறப்போர் அறிஞனே, போர்க்களம் நோக்கிச்செல்! புல்லரை மதியாது செல்! புரட்டரைப் பாராதுசெல்! நேர்வழியிற்செல்!

இந்தி ஒழிந்தது என்ற வீர முழக்கம் இசைக்கச் செல்! அல்லது நீ இறந்தாய் எனும் பண்ணொலிக்குமாறு செல்! தாளமுத்து நடராசன் உளங்குளிரச் செல்! விரைந்து செல்! செல்! பைந்தமிழ் காக்கப் பாசறை நோக்கிச் செல்! செல்!! செல்!!!

"மதுரை மன்னன்"

# இல்லாதது என்ன?

இந்நாட்டில் எதுதான் இல்லை. மலைகள் இல்லையா? இருபுறமும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் இருக்கின்றனவே. செழிப்பான நெல் விளையும் நிலப் பரப்பில்லையா? எரிமலைச் சாம்பல் நிரம்பிய இயற்கைவளம் பொருந்திய மண்ணல்லவோ இந்நாட்டு மண். அதில் எதுதான் விளையாது? ஆறுகள் இல்லையா, இந்நிலப்பரப்பை வளம்செய்ய? அதற்கும் குறைவில்லாத வகையில் கோதாவரியுண்டு, கிருஷ்ணா உண்டு, காவிரி உண்டு, பாலாறு உண்டு, பெண்ணையாறுண்டு. இன்னும் எத்தனை வேண்டும்? உலோகங்கள் இல்லையா? கோலார் தங்க வயல்கள் எந்நாட்டைச் சார்ந்தவை? அய்தராபாத்திலுள்ள மணிமலைகள் எந்நாட்டைச் சேர்ந்தவை? அந்த மணி மலைகளை வெட்டி எடுப்போமானால் இந்த அகண்ட உலகத்தையே விலைக்கு வாங்கிவிடலாமே. இந்நாட்டில் என்ன இரும்புக்குத்தான் குறைவா? கவலையோடு பூமியைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சி நடத்திவந்தால் இந்நாட்டில் எதுதான் கிடைக்காது என்று நினைக்கின்றீர்கள்? எல்லாம் கிடைக்கும்.

—திரு வி. க.

-(✿)-

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 28-ம் நாள் போர்.

### அய்வர் கைது.

சென்னை நவ 9.

இன்று வழக்கம்போல் மறியல் நடத்தித் திரும்பிய அய்வரும் கைது செய்யப்பட்டு கால்நடையாகவே பீச் ரோட்டிலுள்ள போலீஸ்ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காரணம் திரும்பி வரும்போது தமிழ்வாழ்க! இந்தி ஒழிக என்று கூவிக்கொண்டு திரும்பியது ஊர்வலத் தடையை மீறியதாகும் என்று கூறப்பட்டது.

கால்நடையாகத் தொண்டர்களை அழைத்துச் சென்றதால் அது பலரும் செய்திகளைத் தெரிந்துகொள்ளப் பெரும் வாய்ப்பு ஆகிவிட்டதால், திரண்டெழுந்த பொதுமக்கள் ஆத்திரமடைந்து ஒலி முழக்கம் செய்து கொண்டே கோர்ட் வாயிலண்டை கூடிவிட்டனர்.

3-மணி நேரம் தொண்டர்களை ஸ்டேஷனிலேயே வைத்திருந்து பகலுணவு கொடுத்துப் பின் அனைவரையும் விடுதலை செய்தனர்.

# குடி அரசு

13—11—48 சனிக்கிழமை.


## என்ன செய்யப் போகின்றீர்கள் ?

எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், அதைச் செய்யும் மனிதன் செய்வதற்கு முன், சிந்தனைக்கு வேலை தரவேண்டும் என்பது பொது நியதி. சிந்தனையில் தவறு ஏற்படாதவாறு சிந்திக்கவேண்டும் என்பதும் சிந்தித்ததைச் செய்யும் போது திறம்படச் செய்யவேண்டும் என்பதும், அதை வற்புறுத்த வந்த அறிஞர்களின் அனுபவக் கருத்துகள்.

ஒரு தனி மனிதனின் சொந்தக் காரியங்களுக்குத் தன்சம்பந்தப்பட்ட வரையிலுமே இப்படிப்பட்ட சிந்தனைத்திறமும், செயல்திறமும் வேண்டுமென்றால், பெரிதும் மற்றவர்களையே பாதிக்கின்ற பொதுக்காரியங்களைச் செய்பவர்களுக்கு, செய்யவேண்டிய கடமையிலுள்ளவர்களுக்கு எப்பேர்ப்பட்ட திறமை வேண்டும்.?

''நாலுபேரைக் கலந்து செய்யவேண்டும்'' என்று சொல்லப்படுவதைப் பொய்யாக்கவோ, என்னவோ நமது மாகாண நிர்வாகப் பொறுப்புகள் 12, 13 பேரைக் கலந்து செய்யப்படுகிறது. போதாதற்கு மேலிட்டதின் ஆலோசனைகளுக்கு வேறு அப்போதைக் கப்போது காவடி தூக்கப்படுகிறது. இருந்தாலும் கண்டபலன் என்ன? ஏதாவது உருப்படியான காரியத்தை—பாட்டாளி மக்களுக்குப் பயன்படும் காரியத்தை—இதுவரை செய்திருக்கிறார்களா நம் மாகாண சர்க்கார் என்றால், அதற்கு யார் என்ன விடை கூறிவிட முடியும்?

ஏன் மதுவிலக்குத் திட்டம், அதுவும் மாகாண முழுதும் மதுவிலக்குத் திட்டம்கூடவா கண்ணுக்குத் தெரியவில்லை? என்று கேட்கலாம் சில முந்திரிக்கொட்டைகள்.

ஆனால் மது விலக்கால் ஏற்பட்ட நன்மைகள் என்ன? ஏற்படப்போகும் நன்மைகள் என்ன? அதற்கான அறிகுறிகள் என்ன? என்று கேட்டால் என்ன பதில் சொல்லமுடியும்?

மதுவிலக்கினால், மது அருந்தியவர்களில் எத்தனைபேர் அதை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள்? மது அருந்தக்கூடாது என்கிற வைராக்கியம் நூற்றில் ஒருவருக்காவது ஏற்பட்டிருக்கிறது என்றுகூறிவிட முடியுமா? வைராக்கியம்கூட வேண்டாம், தண்டனைக்கு எப்படியாவது தப்பித்துக்கொண்டு கள்ளோ, சாராயமோ குடித்துவிட வேண்டும் என்கிற ஆசைதான் நூற்றில் ஒருவருக்காவது இல்லையென்று சொல்லிவிடமுடியுமா? இல்லை, அப்படித்தான் குடிகாரர்கள் குடிக்காமல் இருந்து வருகிறார்களா? எப்படியோ ஒன்றுக்கு இரண்டாகச்செலவு செய்து, குடிப்பழக்க முள்ளவர்கள் கிடைத்ததைத் குடித்துக் கொண்டுதான் வருகிறார்கள் என்று சொல்லும்படியாகத்தானே, ஒவ்வொரு ஊர்களிலும் நடப்புகள் இருந்து வருகிறது?

சர்க்காருக்கு வருமானம் வந்துகொண்டிருந்த 18-கோடி ரூபாய் இந்த மதுவின் பேரால் இப்போது வரவில்லை. அந்த வருமானத்திற்காகக் கலால் இலாக்கா செலவு செய்துகொண்டிருந்த சுமார் 2, 3-கோடி ரூபாய் செலவை, இப்போது அந்த வருமானம் இல்லாமலே, குறைந்தது 3-மடங்காவது அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்றுதான் சர்க்காரின் புள்ளி விபரம் கூற முடியுமே தவிர, இவ்வளவு நஷ்டத்தையும் அந்த ஏழை மக்கள் தலையிலும், குடித்தே பழக்கமில்லாதவர்கள் தலையிலுமாகக் கட்டி விற்பனை வரி என்கிற பெயரால் அவர்கள் அறியாமலே வசூல் செய்துவிடுகிறோம் என்று கூற முடியுமே தவிர வேறு என்ன விளைந்து விட்டது என்று இந்த சர்க்கார்தான் சொல்லிவிட முடியும்?

''கதர்ச் சட்டையைப் போட்டுக்கொண்டு, அசோகச் சக்ரக்கொடி முன்னால் பறக்கக், கட்டுப் பானைச் சாராயம் காய்ச்சி இப்படி அநியாய விலைக்கு விற்கிறானே! இவனிடம் போலீஸ்காரனும் தாசானுதாசனாய் நடந்து கொள்கிறானே! என்னடா என்றால், பெரிய பொதுநல ஊழியன் என்று வேறு, பெயர் பண்ணிக்கொண்டு வருகிறானே! இவன் வீட்டில் தானே பெரிய, பெரிய காங்கரஸ் தலைகள் எல்லாம், மந்திரிகள் எல்லாம் வந்தால் தங்குகிறார்கள்!'' என்கிற பேச்சு இப்போது எந்த ஊரிலும் சர்வ சாதாரணமாகக் கேட்கப்படுகிறதே. இதற்குத்தான் சர்க்கார் பரிகாரம் என்ன செய்துவிட முடியும்? வேண்டுமானால் மதுவிலக்கில் தோற்று விட்டோம் என்று சொல்லி, நாளைக்கு இந்தப் பேர்வழிகளுக்கு வெளிப்படையாக லைசென்சு கொடுத்து விற்கச் சொல்ல முடியுமே தவிர வேறு என்ன செய்துவிட முடியும்?

இப்படி நாம் கேட்பது மதுவிலக்கில் நமக்கேற்பட்ட வெறுப்பினால் அல்ல! மந்திரி சபையை, இப்போதையப்பார்ப்பன அடிமைகளைக் குறைகூறிக்கொண்டிருக்க வேண்டுமென்கிற எண்ணத்தினாலுமல்ல!! உண்மையாகவே மதுவிலக்கு வெற்றிபெற வேண்டுமென்றால், அதற்கு இப்படித்தானா நிர்வாகம் நடத்துவது என்பதினாலேயே, இதனால் திராவிட ஏழைப்பாட்டாளிகள் அல்லவா தெருவில் நின்று கிண்டாடிச் சாக வேண்டியதாயிருக்கிறது என்கிற ஆத்திரத்தினாலேயேயாகும்.

மாகாண முழுதும் மதுவிலக்கு என்பதால், சர்க்காருக்கு வருமானம் நின்றே போய்விட்டது என்று சொல்லிவிட முடியாது. ஏதோ வேறு பெயரால் அந்த வருமானம் வந்துகொண்டுதான் இருக்கிறது. அதுவும் பெரும்பாலும் ஏழைகளிடமிருந்தே அது வசூலிக்கப்பட்டு விடுகிறது.

பூரண மதுவிலக்கு ஏற்பட்டதால் மது வர்க்கமே ஒழிந்துபோய் விடவில்லை. எப்படியோ மது வகையறாவும் இருந்துகொண்டுதான் இருக்கிறது என்று சொல்லும்படியாய் இப்போதிருக்கிற நிலை, இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகாவது மாறிவிடுமா என்றால் அதற்குத்தான் சர்க்கார் என்ன கூறிவிடமுடியும்?

இப்போது நடைமுறையிலுள்ள மதுவிலக்குத் திட்டத்தினால்

ரோஜா முத்தையா

வேஷதாரிகளான சிலர் பிழைக்க முடிகிறதே தவிர, அதாவது ஆப்காரிக் கண்டக்டர்களுக்குப் பதிலாகத் கதர் வேட்டிக் கள்ளமார்க்கட்காரர்கள் கொள்ளையடிக்க முடிகிறதே தவிர குடிகாரர்களுக்குத்தான் ஏற்பட்ட லாபமென்ன? ஒன்றுக்கு இரண்டாகப் பொருளிலும் நஷ்டப்பட்டு, கெட்டுப்போன சாராயங்களால் உடம்பையும் அதிகமாகக் கெடுத்துக்கொள்கிறார்கள்.

ஆபாசமான, காட்டுமிராண்டித்தனம் நிரம்பிய இந்து மதத்திற்குப் பலியான மக்கள் நிறைந்த இந்த நாட்டில்—அந்த மதச்சேற்றில் அழுந்தி அறிவுக்கொவ்வாத கற்பனை யுருவங்களின் கட்டுக் கதைகளிலே மயங்கி, அந்தக் கற்பனை யுருவங்களுடைய அசிங்கமான நடத்தைகளை யெல்லாம் லீலா வினோதங்கள் என்று துதித்துப் போற்றிப் பாராட்டப்பட்டு வரும் இந்த நாட்டில்—ஒவ்வொரு ஆண்டவனுமே மது அருந்தி வந்திருக்கிறார்கள் என்று மந்திரிகளாலேயே பரப்பப்பட்டு வரும் புராணங்களால் கேட்கப்பட்டு வரும் நாட்டில்—ஆண்டவனுக்குக் கள்ளைப் படைப்பது "அவனுக்குப் பிரீதியான செயல்" என்று நம்பிச் செய்யப்பட்டு வரும் நாட்டில்—அக் கருத்துக்கள் மாற்றப்படாத வரையில், குடித்துக் குடித்துப் பழகியவர்கள் எப்படித்தான் விட்டு விடுவார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும்.

இந்த மதுவிலக்குத் திட்டத்தினால் சராசரி ஒரு நாளைக்கு 2-ரூபாய் வீதம் சம்பாதித்துக் கொண்டுவந்த மரமேறிகள்—வேறு எவ்விதத் தொழிலையும் செய்தறியாதவர்கள் — செய்வதற்கான வேறு அறிவுபெற வாய்ப்பில்லாதவர்கள்—பெரும்பாலும் கல்வி வாசனையே அற்றவர்கள், அவர்கள் உழைப்பில் வாழவேண்டிய பல லட்சக்கணக்கான நபர்களையுடைய அவர்களின் கதி என்ன? இவர்களுடைய எதிர்காலம் என்னாவது? இவர்களின் தொழிலை வெறுத்த அரசாங்கம் இவர்களிடம் பராமுகம் காட்டுகிறதென்றால், இவர்கள் வாழ வழிசெய்யக் கடமைப்பட்ட அரசாங்கம் அதைச் செய்யவில்லையென்றால், ஈவு இரக்கமற்ற இந்த நடத்தைக்குக் கோட்சேயின் நடத்தையைக் கூட ஒப்பாகச் சொல்ல முடியாதே! இவர்கள் சம்பந்தப்பட்ட அளவில் ஏதோ கண் துடைப்பு வேலை நடத்த முடிகிறதே தவிர உண்மையிலேயே பரிகாரம் செய்யவேண்டும் என்கிற கவலை ஏன் இந்தச் சர்க்காருக்கு இல்லாமல் போய் விட்டது? இரண்டொரு பார்ப்பன மாணவர்களுக்குப் பள்ளியிலிடமில்லையென்றால், இரண்டொரு பார்ப்பனர்களுக்கு அவர்கள் நினைத்த உத்தியோகம் கிடைக்காமல் வேறு குறைந்த உத்தியோகம் கிடைத்து விட்டால் அதற்குச் சட்டசபை என்ன பாடுபடுகிறது? மந்திரிகள் என்ன கஷ்டப்படுகிறார்கள்? தேசியப்பத்திரிகைகள் என்ன கூக்குரல் போடுகின்றன? ஆனால் பல லட்சக்கணக்கான பாட்டாளித் தோழர்கள் ஆளவந்தவர்களின் 'அபூர்வமான' திட்டத்தால் சோத்துக்கு வழியின்றி ஆக்கப்பட்டு தெருவில் நிற்கவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள் என்றால் இதற்குக் கண்துடைப்புப் பேச்சுத்தானா பரிகாரம்?

# ஹிந்தி எதிர்ப்பு நிதி, வேண்டுகோள்.

கட்டாய ஹிந்தியை எதிர்த்து மீண்டும் போராட்டம் தொடங்கப்பட்டு விட்டது. மறியல் மேலும் மேலும் தீவிரமாக நடைபெறப்போகிறது. போராட்டம் பல மாதங்கள் நடத்தப்படவேண்டி யிருக்கலாம். அதற்கான செலவும் வரவரப் பெருகிக்கொண்டே யிருக்கும். மறியலுக்கு இன்றைய பட்ஜெட் தினம் சுமார் 100-ரூபாய் ஆகும். பொதுமக்கள் அருள் கூர்ந்து தாராளமாகப் பணம் உதவி செய்யுமாறு வேண்டுகிறேன். கீழ்க் கண்ட முகவரிக்குப் பணம் அனுப்பக்கோருகிறேன்.

—ஈ. வெ. ரா.

முகவரி:—

சா. குருசாமி,
"விடுதலை" நிலையம், சென்னை—2.

கண்துடைப்புப் பேச்சுகள், உண்மையாகவே கண்ணைத் துடைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு வந்து விடுமோ என்றுதான் திராவிடக்கழகம் அஞ்சுகிறது. அதனாலேயே ஈரோட்டுத் திராவிடமாநாட்டில் மத்திய சர்க்கார் மறைமுகமாகத் தடுத்ததைப் பொருட்படுத்தாமல், மாகாணம் முழுதும் மதுவிலக்குத்தான் என்று சொல்லி, எஞ்சிய 8 ஜில்லாக்களிலும் மதுவிலக்கைக்கொண்டு வந்த சென்னை மந்திரிசபையை, அந்த ஒரு தன்மானமிக்க செயலுக்காக மாநாட்டுப் பிரதிநிதிகள் பாராட்டினார்கள் என்றாலும், மதுவிலக்குக்குப் பதில் மக்கள் சினிமாவுக்கு செல்லவேண்டுமென்பதைக் கண்டித்தும், மதுவிலக்கினால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு, புது வாழ்க்கையமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும், இம் முயற்சியில் சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தக்க கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று பொது மக்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது மாநாட்டில் நிறைவேறியிருக்கும் 13-வது தீர்மானமாகும்.

தானாகச் செய்யவேண்டிய நிலை இல்லாது போனாலும், ஒருவர் எடுத்துக் காட்டி விளக்கி வற்புறுத்தியும் அதைச் செயலுக்குக் கொண்டுவரவில்லையென்றால், அது நாட்டு நலத்தில் அக்கறையுடையவர்கள் செயல்தானா? இலங்கை, மலேயாக்கள் இந் நாட்டு மக்களைக் கூவியழைத்த நேரத்தில், இந்த நாட்டு ஏழைத் தொழிலாளிகள் மானத்திற்கஞ்சி வயிற்றைக் கழுவுவதற்காகத் தேயிலைக்கும் ரப்பருக்கும் கூலிகளாக

கச் சென்றனர். இன்று அந்த நிலையும் இல்லை. சிங்களவர்களும் மலாய்க்காரர்களும் இன்று சீறிப்பாய்கின்றனர். இனமேற மூட்டை முடிச்சுகளோடு கப்பலேறுங்கள், காசுபணத்தையெல்லாம் கையில் தாருங்கள் என்கிற உரிமைக் குரல்—அதுவும் ஒடுக்கப்பட்டவர்கள் மீதும் அங்கு வீசப்படுகிறது. இந்த நிலையில் வறுமைக்காளான மக்கள்—வேறு பிழைப்புக்கு வழியறியாதவர்கள்—மானத்திற்கு அஞ்சி யோக்கியமாய்ப் பிழைக்க வேண்டுமென்கிறவர்கள்—தஞ்சை மாவட்டத்திற்கு அகதிகளாய் வந்த இராமநாதபுர வாசிகளைத்தானே பின்பற்றவேண்டியதாயிருக்கும்? இப்படி ஒரு ஜில்லாவிலுள்ள உழைப்பாளிகள் பிழைப்பதற்கு மார்க்கமின்றி மற்றொரு ஜில்லாவுக்குள் நுழைவது, உழைப்பு மதிக்கப்படுவதற்கு வழியா? இதனால் உண்டாகும் போட்டி பொறாமைகள் எவ்வளவு? ஒழுக்கக்கேடுகள் எவ்வளவு? திருட்டு, கொலை எவ்வளவு? என்று பொறுப்புள்ள மக்கள் சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டாமா? இதை எடுத்துக் காட்டி இதற்கு ஒரு பரிகாம்—இராமநாதபுர வாசிகளுக்கு இராமநாதபுர மாவட்டத்திலேயே செய்யப்பட வேண்டுமென்று மாநாட்டுப் பிரதிநிதிகள் 17-வது தீர்மானத்தினால் சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி, ஒரு ஜில்லாவாசிகள் மற்றொரு ஜில்லாவில் அகதிகளாகப் படையெடுப்பது விரும்பத்தக்க பயனைக்கொடுக்காது என்று சர்க்கார் உணர்ந்து கொண்டும், மரமேறிகளான பாட்டாளித் தோழர்களுக்கு வேறு புது வாழ்வுக்கு வழிகாட்டவும் தனக்குச் சக்தியில்லை என்று மழுப்புமானால், தொழிலின் இயற்கையால் உடல் வலி படைத்த அத்தொழிலாளர்களின் மனப்போக்கு எப்படி வளரும் என்பதைப் பொதுமக்கள் ஒரு கணம் யோசித்துப்பார்க்க வேண்டும்.

முந்திய 16-ஜில்லாக்களில் கள்ளுக் கடைகள் எடுபட்டிருந்த நிலையில், இல்லாத ஒரு கொந்தளிப்பு, இப்போது மேலும் 8-ஜில்லாக்களில் எடுபட்டபோது தான் உண்டாகிவிடுமா? இப்படி யாரும் எண்ணலாம். அந்தக்கொந்தளிப்பான நிலையை உண்மையாகவே நாமும் விரும்பவில்லை. ஆனால் வயிற்றுச் சோற்றுக்கும் வழியற்ற நிலையில் திடீர், திடீரென்று ஒரு பெரிய மக்கள் கூட்டம் ஒரு சர்க்காரால் உற்பத்தி செய்யப்படுகின்றதென்றால், காணப்படும் அமைதியே கலங்காமல் இருந்துவிடும் என்று நம்மால் எண்ணமுடியவில்லை. ஒரு பத்து நாளைக்குமுன்பு திருடிவிட்டு அகப்பட்டுக் கொண்ட கள்ளிறக்கும் தொழிலாளர்களைப் பற்றிச் சென்னைப் பத்திரிகைகள் சித்திரித்திருந்ததை மறந்து விடாதபாரும் இதற்கு வழி என்ன? என்று தான் கேட்டாகவேண்டும்.

ஆம்! இந்த நாட்டில் ஒரு புறம் அகதிகளை உற்பத்தி செய்து கொண்டு, அதற்கு ஒரு பரிகாரமும் செய்ய முற்படாமல், வடநாட்டு அகதிகளை லட்சம் லட்சமாய் இங்கு கொண்டு வந்து குவிப்பானேன்? அதற்கு இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து லட்சம் லட்சமாய்க் கொட்டி அழுவானேன்? உங்களின் அடிமைப் புத்தியால் உள்நாட்டு அகதிகள் வடநாட்டு அகதிகள் ஆகியவர்களுக்கிடையே நாங்கள் சிக்கிக் கொண்டு, மனத்துன்பமும் உடல் கஷ்டமும் பொருள் நஷ்டமும் அடைவானேன்? இதைக் கேட்க வேண்டியது மக்கள் பொறுப்பல்லவா?

அதனால் தான் மாநாட்டுப்பிரதிநிதிகள் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், இதற்கான மார்க்கம் செய்ய கிளர்ச்சி செய்யுங்கள் என்று. நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

## வருந்துகிறோம்.

நம் கோவை மாவட்டத்தின் பிரபல மிராசுதாரரும், கொங்கு வேளாள சமூகத்தின் சிறந்த தலைவருமான தோழர் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள் திடீர் என்று ஏற்பட்ட கார் விபத்தின் காரணமாய் இந்த மாதம் 8ம் நாள் கோவையில் இயற்கையடைந்த சேதி யறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரின் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### ஈரோட்டில் இந்தி எதிர்ப்பு நாள்.

ஈரோடு, நவ. 10.

பெரியாரவர்களின் அறிக்கைக்கிணங்க இன்று மாலை 6-30 மணிக்குக் காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் இந்தி எதிர்ப்பு நாள் கூட்டம் கூடியது.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் அப்பாவு அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மழை தொடங்கிவிட்டதால், இந்திஎதிர்ப்பில் பொது மக்கள் கலந்தும் உதவி செய்தும் வரவேண்டும் என்று ஒரு தீர்மானமும், தோழர் வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்களின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானமும் தலைவரால் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் முடிந்தது.

ஒலிபெருக்கி அமைத்திருந்தும், பலர் விளக்கிப்பேச இருந்தும் மழையினால் கூட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்றே என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

## இந்தி எதிர்ப்பு. மறியல்.

### 29ம் நாள் போர்.

சென்னை, நவ. 10.

இன்றும் வழக்கம் போலவே, நேற்றுக் கைதாகி விடுதலை செய்யப்பட்ட அய்வரும் மறியல் செய்தனர். திரும்பும் பொழுதுபொது மக்கள் பெரும் உற்சாகமாக எதிர்ப்பொலி முழக்கம் செய்து பின்பற்றினார்கள் என்றாலும் இன்று தொண்டர்கள் கைது செய்யப்படவில்லை, மக்களும் போலீசாரால் விரட்டப்படவில்லை.

---


## எதிர்பாருங்கள்!

அறிஞர், கவிஞர், ஆசிரியர்
நடிகர்களின்
சிறந்த பாராட்டைப்பெற்ற
சீர்திருத்த நாடகம்!

அடுத்தவாரம் முதல்
தொடர்ந்து வெளிவரும்.


---

நடக்கவிருப்பவை.

### திருமணம்.

14—11—48ல், மதுரை திரு. முத்துகாமாட்சி அவர்களின் செல்வன் நாகப்பனுக்கும் மதுரை திரு. சி. சவுந்தரபாண்டியன் அவர்களின் செல்வி சொர்ணவள்ளிக்கும், திருப்பரங்குன்றம் நெல்மண்டி பொது மடத்தில் காலை 9-30 மணிக்கு திருமணம் நடைபெறும்.

ரோஜா முத்தையா

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்குத்தெரியாது; அவள் யாரென்றும் அவனுக்குத் தெரியாது; ஆனால் தாங்களிருவரும் பிச்சைக்காரர்கள் என்பது மட்டும் இருவருக்கும் நன்றாய்த் தெரியும். அவள் ஆறு வயதாயிருக்கும் போது எவ்வாறோ இவனுடன் சிநேகமானாள். அதிலிருந்து இவ்விருவரையும் பிணைத்திருந்த அன்பென்னும் கயிறு பலப்பட்டு வந்தது; அக்கிழவனது கையையும், அச்சிறுமியின் கையையும் பிணைத்திருந்த குச்சியைப் போல, அவ்விருவரது வாழ்க்கைச் சக்கரங்களையும் அன்பென்னும் அச்சு பிணைத்திருந்தது.

ஓர் நாள் காலை எழுந்ததும் வழக்கம் போல கார்ஸ்டாண்டுக்குப் புறப்பட்டார்கள். கடை வீதியின் பக்கமாகப் போய்க்கொண்டிருக்கும்போதே "அம்மா ஒரு பீடி" என்றான்கிழவன், அய்யய்யோ! மூணு பீடியைப் படுத்திருந்த இடத்தில் வச்சுட்டு மறந்துட்டு வந்துட்டேன், இந்தக் காப்பிக் கடைக்கிட்டே நில்லு, ஓடிப்போய்ஒரு நொடியிலே எடுத்தாந்திர்றேன் என்று சொல்லிவிட்டு அவள் ஓடினாள், கடை முன்பு அவன் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்த காப்பிக்கடை அய்யர் "டே கிழட்டுப் பொணமே! எண்டா இங்கே பிசாசு மாதிரி நிக்கிறே கடையை விட்டுவிலகி வீதியில் நில்லுடா"!! என்றார், கிழவனும் அவ்வாறேகடையை விட்டு விலகி வீதியில் நின்றான்.

தூரத்திலே வேகமாக வரும் ஓர் கார்ச் சப்தமும், அதனுடைய ஹார்ன் சப்தமும் அவனுக்குக் கேட்டது. உடனே எதிர்த்த பிளாட்பாரத்திற்குப் போய் விடலாமென்று கிழவன் விரைவாய் நடந்தான். ஆனால் அந்தக் காரை ஓட்டி வந்த அந்த ஊர் பெரிய பண்ணையாருக்குக் கிழவன் விலகிய பக்கமே திருப்ப ஆசை வந்ததுபோலும்; அவ்வாறே செய்தார். பிரேக் போட்டும் வண்டி நிற்கவில்லை, அவ்வளவு வேகம். "அம்மா! எங்கே போயிட்டே" என்று கதறியது தூரத்தில் வரும் அவள் காதிலும் விழுந்தது; ஓடிவந்தாள். அதற்குள் அவன் கையில் வைத்திருந்த சட்டி சுக்குநூறாக உடைந்து பறந்தது; அவனது மணடைக்கும் அச்சட்டியின் கதியே நேர்ந்தது; அவன் கையிலிருந்த கம்பு கார்மோதிய வேகத்தால் மேலே எழும்பி அவளுடைய இருதயத்தையே உடைத்து விடுவதுபோல அவள் நெஞ்சில்விழுந்தது; ஆனால் அதற்குச் சில வினாடிகளுக்கு முன்பே அவளது இருதயம் அவனது மண்டைக்கு நேர்ந்த கதியை அடைந்துவிட்டது.

ஓடிவந்து கதறிய அவளிடம் 'பண்ணையார்' ஓர் ரூபாயை எடுத்து வீசினார். அதை அவள் எடுத்துக் காரின கண்ணாடிமேல் வீசி எறிந்தாள். அவளுடைய இருதயம் உடைந்ததைப்போல அக் கண்ணாடியும் உடைந்தது. 'இந்த நாட்டுப் பிச்சைக்காரர்கள் எங்காவது ஒரு முழு ரூபாயை இவ்வாறு மறுப்பார்களா?' என்று பண்ணையார் வியந்தார்.

கீழே கிடந்த கம்பை எடுத்துக் கொண்டு, கையிலிருந்த மூன்று பீடிகளையும் நீட்டிக்கொண்டு, "இந்தா தாத்தா பீடி" என்று கத்திக் கொண்டே தாங்களிருவரும் முன்பு படுத்திருந்த இடத்தை நோக்கி ஓடி, அங்கு விழுந்தாள். "இந்தா தாத்தா பீடி" என்ற சப்தம் அந்த இடத்தில் நாலு நாட்கள் வரை இரவும் பகலும் ஒலித்துக்கொண்டிருந்தது.

கோபுர வாசல் கதவின் ஓரத்தில் இரண்டு கற்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. கமலாலயத்தின் படிக்கட்டின் இடுக்கில் பாதி தேய்ந்த ஓர் செங்கல் இன்னும் இருக்கிறது. நீங்கள் இப்போது சென்றாலும் அவற்றைப் பார்க்கலாம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

புராணம்சைவ முறையின்பாற்பட்டது. பாரதம் வைணவமுறையின்பாற் பட்டது. கந்தபுராணத்தில் பாரதத்திலுள்ளதைக் காட்டிலும் அதிகமாக இயற்கைக்கு மாறான பிறவிகள் காணப்படுகின்றன. அநாகரிகமும்சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இவையிரண்டிற்கும் பிறகு சில காலம் பொறுத்து எழுதப்பட்ட நூல்தான் இராமாயணம். எனவேதான் மேல் இரண்டு நூல்களில் காணப்படும் அநாகரிகமும், அமானுஷயமும், இயற்கைக்கு மாறான பிறவிகளும் சற்று குறைவாகக் காணப்படுகின்றன. அடிப்படையில், கதைப்போக்கில் கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றாகத்தான் காணப்படுகின்றன.

## இப்படியா கடவுள் பேரால்?

கந்த புராணத்தில் கந்தனும், இராமாயணத்தில் ராமனும் ஆரியத்தலைவர்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். இரண்டும் தேவர்கள் அசுரர்கள் என்கிற இரு கட்சிகளை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் எழுதப்பட்டுள்ளன. ஆனால் கந்த புராணத்தில் காட்டுமிராண்டித்தனம் மிக மிக அதிகமாகக் காணப்படுகிறது. பெரும் பெரும் புளுகுகளும் அதில்தான் அதிகம் காணப்படுகின்றன. அதில்தான் வைக்கப்புல்லிலிருந்து பட்டாளங்கள்தோன்றியதாகவும் நெற்றியிலிருந்து மனித உருவம் பெற்ற குழந்தை தோன்றியதாகவும் பகிரண்டப் புளுகுகள் எழுதப்பட்டிருக்கின்றன. கடவுள் பேரால் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று தம் இஷ்டம்போல் எதை எதையோ புளுகிவைத்து விட்டார்கள்.

பாரதமோ இன்னும் மோசம். ஒருத்திக்கு 5 புருஷர்கள் இருந்ததாக எழுதி விட்டு அவளையே பதிவிரதையாகவும் கற்பித்து விட்டார்கள். அந்த புருஷர்களும் அதாவது பஞ்சபாண்டவர்களும் யார் யாருக்கோ எங்கெந்த விதமாகவோ பிறந்ததாகத்தான் கதை எழுதப்பட்டிருக்கிறது. அக்கதையில் காணப்படும் குழந்தைகளில் பெரும்பாலானவற்றிற்குத் தகப்பன்மாரைக்கண்டறிவது கஷ்டமாகவே இருக்கிறது. அக்காலத்திய ஆரிய நாகரிகம் அப்படித்தான் இருந்தது போலும்!

## கந்தபுராணமும் இராமாயணமும்.

கந்த புராணமும் ராமாயணமும் எப்படி ஒரே அடிப்படைக் கதையை வைத்துக்கொண்டு எழுதப்பட்டவை என்று விளக்கிக்காட்டுகிறேன் பாருங்கள்.

கந்த புராணத்தில் சுப்பிரமண்யன் கடவுளாகவும் ராமாயணத்தில் ராமன் கடவுளின் அம்சமாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் பெண்டாட்டிமார் இருவருமே காட்டில் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர்கள். பெற்றோர்கள் யாரென்று தெரிவிக்கப்படாதவர்கள். அனுபவத்திற்கு ஒட்டிப் பார்த்தால் யாரோ திருட்டுத்தனமாகப் பெற்றுப் போட்டு விட்டுப் போன குழந்தைகள், என்றே கொள்ளத்தக்கவைகள். ராமனும், கந்தனும் இருவருமே தேவர்களின் முறையீட்டால் அவர்களை அசுரர் ராட்சதர்கள் இடமிருந்து காப்பாற்றுவதற்குத் தோற்றுவிக்கப்பட்டவர்கள். இருவருக்கும் விரோதிகள், சூரனும், ராவணனும் ஆகிய அசுரர்கள்தான். (அசுரரென்றால் மது அருந்தாதவர்கள், ராவணன் என்றால் கருத்தவன்) இருவருடைய தங்கைமார் இருவருமே மேலே கூறப்பட்டவர்களின் தம்பிமாரால் மூக்கும் முலையும் அறுபடுகிறார்கள். ராமனுக்கு அநுமா கிடைத்தது போல் கந்தனுக்கும் ஒரு வீரபாகு என்கிறவன் கிடைக்கிறான். இலங்கை எரிக்கப்பட்டது போல் சூரனுடைய நகரமும் எரிக்கப்பட்டிருக்கிறது. சூரன் தேவேந்திரன் மனைவியைச் சிறைபிடிக்க ஆசைப்பட்டு அவன் மகனைச் சிறையில் வைத்தான். ராவணன் ராமன் மனைவியைச் சிறைபிடித்தான். இன்னும் பல நடப்புகள் ஒன்று போலவே. பேர்தான் மாறியிருக்கின்றனவே ஒழிய கதைப்போக்கில் எவ்வித முக்கிய மாறுதலும் காணப்படவில்லை. கந்தபுராணத்தில் கந்தனை தெய்வமயமாகவே காட்டப்பட்டிருக்கிறது. இராமாயணத்தில் கொஞ்சம் அது குறைவாக்கப்பட்டு அதாவது இராமன் கடவுள் அவதாரமாக மட்டுமே காட்டப்படுகிறான். இவ் [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

தன்மையையும் சுமத்தப்படுகிறான்.

## ஆண்டவனைப் படைத்ததில் ஆரியரும் வள்ளுவரும்

திருவள்ளுவர் குறளோ ஆரியத்தை, ஆரிய தர்மத்தை அப்படியே மறக்க எழுதப்பட்ட நூலாகக் காணப்படுகிறது. கடவுள் வாழ்த்தில்கூட வள்ளுவர் ஒழுக்கத்தையும் அறிவையும் பற்றற்ற தன்மையையும் தான் கடவுளாகக் காட்டியுள்ளார். கடவுளை அறிஞன் என்கிறார். பிறப்பு இறப்பு அறுத்தோன் என்கிறார். ஆசை அறுத்தோன் என்கிறார். அவர் ஒரு இடத்திலாவது கடவுளை அயோக்கியனாகவோ, ஒழுக்க ஈனம் உடையவனாகவோ, வஞ்சகனாகவோ, விபசாரியாகவோ சிருஷ்டித்திருக்கவில்லை.

ஆரிய நூல்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள கடவுள் தன்மையிலுள்ள ஆபாசக் கேட்டிற்கோ அளவு சொல்ல வேண்டியது இல்லை. கீதை போற்றும் கிருஷ்ணனைப் போன்ற விபசாரக்காரனை, வஞ்சகனை, கீழ் மகன் தன்மையை ஆரியர்கள் தவிர்த்த வேறு யாரும் கடவுளாக, நீதியாக சிருஷ்டித்திருக்கமாட்டார்கள். அவன் ஒரு விபசாரிக்கல்ல, லட்சக்கணக்கான பெண்களைக்கெடுத்து விபசாரிகளுக்கும் குடிப்பெண்களுக்கும் காமுகனாய், காதகனாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் அவன் ஒரு சந்தர்ப்பத்திலாவது ஒழுக்கமாக நடந்துகொண்டிருப்பதாக யாராலும் காட்டமுடியாது. அவன் நடத்தைகள் லீலைகளாக்கப்பட்டிருக்கின்றன.

## விஷ்ணுவின் விரக வெறி!

ராமனை எடுத்துக்கொண்டால் அவன் யாருக்கோ பிறந்ததாகத்தான் காட்டப்பட்டிருக்கிறதே ஒழிய தசரதனுக்கே பிறந்ததாக இல்லை. அவன் பெண்டாட்டியை இழந்து அலைவதற்குக் கூறப்படும் காரணமோ அதை விடப் படுமோசம். மகாவிஷ்ணு எந்தப் பெண்மீதோ மோகங்கொண்டாராம். மோகத்தைத் திருப்திசெய்ய அவள் இடம் கொடுக்கவில்லையாம். எனவே அம்மகாவிஷ்ணு அவளுடைய புருஷன் இறக்கும தறுவாயைப் பார்த்துக்கொண்டேயிருந்து இறந்ததும் அவனுடலில், தான் புகுந்து கொண்டு அப்பெண்ணை அடைந்து கூடி இன்புற்றுக்கொண்டிருந்தாராம். அந்தப் பெண் எப்படியோ தன் புருஷனுடைய உயிரல்ல அவ்வுடலில் வேலை செய்வது என்று அறிந்த உடனே உண்மையைக் கேட்டுணர்ந்து "மறு ஜன்மமெடுத்து மகாவிஷ்ணு தன் மனைவியைப் பிறன் கையில் விட்டுத் தன்னைப் போல் கற்புக்கெட்டவளாக வேண்டுமென்று சாபம் கொடுத்தாளாம். அதையொட்டித்தான் ராமன் அவதாரமெடுத்து ... ... ...னுக்குப் பறி கொடுக்கவேண்டி ஏற்பட்டதாம், என்னே தெய்வத்தன்மை! பிறன் மனைவிமீது மோகிப்பதும் வஞ்சகமாக அவளை அநுபவிப்பதும் இவைதான் ஆரிய முறைப்பட்ட தெய்வத்தன்மைகள். ஆண்கள் தன்மை இப்படி என்றால் ஆரியப்பதிவிரதைகளைப்பற்றிப் பேசினால் நம்து பெண்கள் சகிக்கமாட்டார்கள்.

## மற்றோரு கதை!

இராமாயணத்திற்குக் கூறப்படும் மற்றொரு கதையைப்படித்தால் இன்னும் அசிங்கமாயிருக்கும். ஒரு நாள் நண்பகலில் மகாவிஷ்ணு தன் மனைவியான லட்சுமியிடம் கூடிக் கலவி செய்து கொண்டிருந்தாராம். அதை துர்அதிர்ஷ்டவசமாகத் துவார பாலகர்கள் பார்க்க நேர்ந்துவிட்டதாம். உடனே மகாவிஷ்ணு கோபங்கொண்டு அவர்களை அசுரர்களாகப் பிறக்கவேண்டுமென்று அவர்களுக்குச் சாபம் கொடுத்து விட்டாராம். இவர்கள் பகலில் படுத்து இன்புற்றதற்காக துவாரபாலகர்களா தண்டனை அடைவது? அப்படித்தான் பகலில் கூடுவதாயிருந்தாலும் காவல்காரர்கள் வெளியில் இருக்கிறார்களே ஏதாவது அசந்தர்ப்பத்தில் வந்து விடப்போகிறார்கள் என்று கதவையாவது மூடிக்கொண்டு இருக்க வேண்டாமா? அவ்வளவு அறிவுகூடவா இல்லை அந்த ஆரியக் கடவுள்களுக்கு? இவ்வளவு முட்டாளையா தெய்வமென்று கூறுவது. என்னே மடத்தனம்!

## தசரத மகாராஜாவின் தர்பார்!

ஒரு தசரதனுக்கு 60 ஆயிரம் மனைவிகளா? கிட்டத்தட்ட 5 முனிசிபாலிட்டியே அவனுடைய மனைவிகளுக்கு மட்டும் வேண்டியிருக்குமே. அவர்களுக்கு ஆள் அம்பு வேறு என்றால் ஒரு கோயம்புத்தூர் முனிசிபாலிடியே போதாதே. மற்றும் குழந்தை குட்டி என்றால் ஒரு பெரிய சென்னை கார்ப்பொரேஷனே, மக்களே தேவை ஆகிவிடுமே. ஒரு பெண்டாட்டியிடம் ஒரு நாள் இருப்பதாக வைத்துக்கொண்டால் கூட, மறுபடி அதே பெண்டாட்டியைச்சந்திக்க, ஒரு ரவுண்ட்வர 165 வருடமாகி விடுமே. இத்தனை பேரையும் யார் பணத்தைக் கொண்டு காப்பாற்றியிருப்பான் அந்த அரசன்? இந்த தர்ப்பார் இந்துஸ்தான் ஆரிய தர்பாரைவிட மிஞ்சிவிட்டதே. குடி மக்கள் வரிப்பணத்தை கொண்டு தானே இந்த போகபோக்கியம். எந்த யோக்கியனாவது குடிமக்களின் வரிப்பணத்தை இப்படி வீணாக்குவானா? அப்படி வீணாக்குபவனிடத்து குடிமக்களுக்குத்தான் பற்றுதல் இருக்குமா?

எவ்வளவு அயோக்கியத்தனம் செய் ... ... தாது, பட்டமகிஷிகளோடு (60,002ம்) போதாது என்று 60,003 வதாக ஒரு இளம் மங்கையைக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேகயமன்னனைக் கேட்கிறானே. அவன் கிழவனாகிவிட்டான் என்கிற காரணத்திற்காக மறுத்தும் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் தன்னுடைய பட்டணத்தையே அப்பெண்ணுக்கு (கைகேயிக்கு) தாரைவார்த்துக்கொடுத்து அவளை மணந்துகொண்டு அவளுடைய பிரதிநிதியாக இருந்து ஆட்சிபுரிகிறானே.

இவ்வளவு நடந்திருந்தும் பின்னர் கைகேயியையும் பரதனையும் வஞ்சித்து ராமனுக்குப் பட்டம் சூட்டவேண்டுமென்று குருவோடு, புரோகிதரோடு, மந்திரிமார்களோடு சதிசெய்து சகல ஏற்பாடுகளையும் செய்கிறானே. எங்கு கேகய மன்னனுக்குத் தெரிந்தால் சண்டைக்கு வந்து விடுவானோ என்று அவனுக்குச் சொல்லாமல், தன் மகனும் உரிமையாளனுமான பரதன் இல்லாத சமயம் பார்த்து, கைகேயிக்கும் தெரியாமல் பட்டத்தைக் கோசலையின் மகனான இராமனுக்குக் கொடுக்கச் சூழ்ச்சி செய்கிறானே. கடவுள் அவதாரமாகக் கருதப்படும் ராமனும் இவ்வளவு சங்கதி தெரிந்திருந்தும் தகப்பனுடன் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்கிறானே, பரதனுக்குச் சொந்தமான பட்டத்தையடைய. இந்த நடத்தையை ராமனே ஒப்புக்கொள்கின்றானே, தான் காட்டில் இருக்கும் போது.

## கம்பனின் கடைகெட்ட போக்கு!

இவ்வளவு வஞ்சக நெஞ்சம் படைத்த இராமனைக் கடவுள் அவதாரமென்று புகழ்கிறானே கம்பன், சற்றும் மானம் வெட்கமின்றி.

பரதனின் வேலைக்காரி இதில் தலையிடாதிருந்தால் பட்டம் சூட்டிக்கொண்டிருப்பானே இராமன். பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய தினத்தன்று காலை தனக்குப் பட்டமில்லை என்று இராமன் அறிந்ததும் தலையில் அடித்துக் கொண்டு அழுகிறானே, இது வேண்டாம், அதுவேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுகிறானே, விதி தவறுமா என்று அழுகிறானே, காட்டுக்கு விரைந்து சென்றுவிட்டால் பரதன் அழைத்ததும் பிறகு தந்திரமாகத் திரும்பி வந்துவிடலாம் என்று தாயாருடன் மறுபடியும் சூழ்ச்சி செய்கிறானே, இவ்வளவையும் கூலிக்காசுக்காகப் பாடிய கம்பன் மறைத்துவிட்டானே. அரசு கிடையாது என்று கேட்டதும் "அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா அவன் முகம்" என்று பாடிவிட்டானே, கூலிக்காரக் கம்பன்; இனத்துரோகி கம்பன்!

## மறுக்க முன்வரட்டுமே!

பார்ப்பனரின் பிச்சைக் காசுக்காக

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ிய தோழர்கள் துணிவிருந்தால் இவற்றை மறுக்கட்டுமே பார்ப்போம். எதையாவது தவறு என்று காட்டட்டுமே நாங்கள் புத்தகங்களில் எழுதியிருக்கிறோமே. இவ்வுண்மைகளை விளக்கமாக ஏதோ, ஒரு கம்ப பக்தன் கூட முன்வரக் காணோமே. எங்கள் கூற்றை மறுக்க.

மற்றொரு ஆரிய இதிகாசமாகிய பாரதத்தில் ஒருத்திக்கு ஐந்து கணவன்மார் இருக்க இராமாயணத்தில் ஒருத்திக்கு ஒரே கணவன் என்ற நியதி காணப்படுவானேன். இடையில் குறள் வந்து குறுக்கிட்டது தானே. குறளுக்குச் செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் தான் கம்பனுக்கு கூலிகொடுத்துக் கவிபாடும்படி செய்து விட்டனர் ஆரியப் பார்ப்பனர்கள். வால்மீகி இராமாயணத்தைத் தன் இஷ்டம் போல் மாற்றி விட்டான் கம்பன். எனவேதான் அவனைச் சாடவேண்டியிருக்கிறது.

## வால்மீகியின் இராமாயணம்!

வால்மீகி ஒரு அரேபியன் நைட் கதையைப் போல்தான் ராமனுடைய கதையையும் பாடி இருக்கிறார். தசரதனுடைய குடும்பத்தை ஒரு சாதாரண குடும்பமாகத்தான் குறிப்பிட்டுள்ளார். அவன் வீட்டுப் பெண்களை மீன் கண்டம் விற்கும் பெண்டிர்களைப் போன்றுதான் வர்ணித்துள்ளார். மேலும் சீதையின் கற்பில் சந்தேகம் கொள்வதற்கான பல கருத்துக்களை, அவள் ஓர் கீழ்த்தரபெண், சாஸ்திரப்படியான கற்பு அற்றவள் என்று கொள்வதற்கான பல கருத்துக்களை அவர் இராமாயணத்தில் இடைஇடையே கொடுத்துள்ளார். தன் மனைவி மீது சந்தேகம் கொண்டு கர்ப்ப காலத்தில் அவளைக் காட்டிற்குக் கொண்டு போய் விட்டு வருவது போன்ற அதாவது சாதாரண மனிதன்கூட வெட்கம் கொள்ளக்கூடியதான பல சேதிகளை அவர் கொடுத்துள்ளார்.

## திருக்குறள் சுயமரியாதையின் ஊற்று!

திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களுள் ஒன்றேனும் ஒழுக்கக் குறைபாடுள்ளதாகக் காணப்படாது. அறிவுள்ளவர் யாரும் மறுக்க முடியாத, வெறுக்க முடியாத கருத்துக்களை அமைத்துத்தான் அவர் குறளை இயற்றியுள்ளார். குறளை ஊன்றிப்படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கிறது.

## திராவிடன் அன்றே எதிர்த்தான்!

அன்பர் கலியாண சுந்தரனார் திராவிட நாடு வேறு ஆரிய நாடு வேறு, திராவிடப்பண்பு வேறு, ஆரியப்பண்பு வேறு என்று இன்று கூறுவது தெரிவித்தது போல் திராவிட நூல் வேறு, ஆரிய நூல் வேறுதான். திராவிடர்கள் எப்போதுமே ஆரியர்களை, ஆரிய கலாச்சாரத்தை வெறுத்தே வந்திருக்கிறார்கள். திராவிட நாட்டை ஆரியர்களின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றப் பெரிதும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இதனுண்மையைக் கந்தபுராண ஆரம்பத்தில் காணலாம்.

சிவபெருமானுடையகல்யாணத்தின் போது தேவர்களும் ரிஷிகளும் வந்து தென்னாடு உயர்ந்துவிட்டதென்றும் வடநாடு தாழ்ந்துவிட்டதென்றும் அதற்குப் பரிகாரம் உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்துகொள்கிறார்கள். இதிலிருந்து தென்னாட்டினர் உயர்வு ஆரியர்களால் எவ்வளவு வெறுக்கப்பட்டது என்பதுஇனிது புலனாகிறது. சிவன் யார் கெட்டிக்காரன் என்று ஆலோசித்துப் பார்த்து அகத்தியனை அனுப்பியிருக்கிறார், பரிகாரம் செய்ய. மிக மட்டமான அதாவது சூழ்ச்சியில், தந்திரத்தில், வஞ்சகத்தில் கைதேர்ந்த ஒருவனை அனுப்பிவைக்கிறார். அவன் விந்திய மலையருகில் வரவும் அங்கு காவல் செய்துவந்த வாதாபியும் வில்லவனும் அவனைத்தடுத்துவிடுகிறார்கள். இவர்கள் கந்தபுராணத்தில் சித்திரிக்கப்படுகிற சூரனுடைய தங்கச்சியின் மக்கள் ஆவார்கள். இவர்கள் வடநாட்டிலிருந்து யார் வந்தாலும் அவர்களைக் கொன்று தின்று விடுகிறதாகக் கூறப்படுகிறது. அதே மாதிரியே அகத்தியனையும் தின்று விட்டதாகவும் ஆனால் அவனை ஜீர்ணம் செய்ய முடியவில்லை என்றும் அவனுடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு அகத்தியன் வெளிப்பட்டுச் சென்றான் என்றும், சென்று தமிழ் வளர்த்தான் என்றும் காணப்படுகிறது.

## மடப்புலவர்களின் மதித்திறமை!

இந்தத் தமிழ்ப் புலவர்களும் ஆராய்ந்தறியாமல் இதை யொட்டி அகத்தியன் வளர்த்த தமிழ் என்று புகழ்பாடிவிட்டனர். அகத்தியன் இங்கு வந்து பாதிரிகள்போல் தமிழ் கற்று நமது தர்மங்களை, ஒழுக்கங்களை மாற்றியமைத்து இருக்கக்கூடும். இதற்கு ஆக அவனுக்கு நன்றிகாட்டும் அவ்வளவு நன்றியுடையவர்கள் நமது மடப்புலவர்கள். நாய் நன்றி காட்டுவதெல்லாம் அன்னியனிடத்துத் தான் என்பது போல் பழங்கால இப் பண்டிதர்களும் அந்நிய அகத்தியனுக்கே மரியாதை செய்து விட்டனர். அந்த அகத்தியன் முடிவில் தமிழ்நாட்டிலிருந்து ராவணனைத் துரத்திவிட்டதாக வேறு காணப்படுகிறது. இதற்கும் ராவணனுடைய தம்பிக்கு ராமன் பட்டம் வாங்கிக்கொடுப்பதற்கும் ஏதேனும்பொருத்தம் இருக்குமோ என்பதும் தெரியவில்லை. இக்கதைகளெல்லாம் அபிதான சிந்தாமணியில் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் படித்துப்பாருங்கள் தெரியும், ஆரியர் திராவிடர் போராட்டம் எப்போது ஏன் துவங்கியது என்று.

## காட்டிக்கொடுக்கும் கயவர்களின் முன்னோன் விபீஷணன்!

இப்போது எப்படி சில திராவிடர்கள் அறிவிழந்து ஆரிய வடவர்களையே தமது அரசியல் தலைவர்கள் என்று கொண்டு தாம் பணியாற்றும் வகையில் ஏனைய திராவிடர்களையும் எப்படி அவர்களுக்கு நிரந்தர அடிமைகளாக வைத்திருக்க முயற்சிக்கின்றனரோ அதுபோல் வால்மீகி காலத்திலும் சில திராவிடர்கள் இருந்திருப்பதை நாம் அவரது ராமாயணத்தைப் படிப்பதன் மூலம் நன்கு அறியலாம். வாலி கொல்லப்பட்ட பிறகு விபீஷணனைக் கொண்டு வந்து அநுமார் சேர்க்கிறார். அப்போது சுக்ரீவன் கேட்கிறான், அண்ணனுக்கே துரோகம் செய்யும் இவன் நாளை உனக்கு மட்டும் துரோகம் செய்யமாட்டான் என்று எப்படி நம்புவது என்று. அதற்கு இராமன் என்ன சொல்லுகிறான பாருங்கள்.

"என் லட்சியத்திற்கு அதைப் பற்றி யோசிக்கவேண்டிய அவசியம் இல்லை. இராவணன் தோல்வி தானே, அவனது முடிவுதானே எனக்கு வேண்டியது. அதற்கு உதவி செய்யத் தகுந்தவன் யாராக இருந்தால், எப்படிப்பட்டவனாயிருந்தால் என்ன. அவனை நண்பனாகக்கொள்ளவேண்டியதுதானே! மேலும் அவன் எப்படி எனக்குத் துரோகம் செய்ய முடியும்? அவனுக்குவேண்டுவது அண்ணனுடைய ராஜ்யமன்றோ. அண்ணன் செத்தால்தானே அவனுக்கு ராஜ்யம் வரும். ஆதலால் தனது அண்ணனை ஒழிக்க வழி நமக்குக் கூறி உதவி செய்துதானே தீருவான். இந்த விஷயத்தில் அவன் நமக்குத் துரோகம் செய்ய முடியாதே. அதன் பிறகு என்ன துரோகம் அவனால் நமக்குச் செய்ய முடியும். இவனை விட்டால் ராவணனை எமக்குக் காட்டிக் கொடுக்கக்கூடிய வேறு ஆள் ஏது" என்று சொல்லி விபீஷணனை ஏற்றுக் கொள்கிறான்.

## ஆச்சாரியார் ராமநாதர்களை அறிமுகப் படுத்திய முறை

இதேமாதிரி தான், தம்முடைய லட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டு இன்றையப் பார்ப்பனர்களும் மானாபிமானம் அற்று தம் கட்சிக்கு ஆள்தேடித் திரிகிறார்கள். நம்மை எவன் துரோகம் செய்கிறானோ அவன் தான் பார்ப்பனர்க்கு ரொம்பவும் வேண்டியவன். மகாதேசபக்தன். அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவர்கள். புகழ் பெறுபவர்கள். நம்முடைய துரோகிகளின் மூலம்தான், அன்று

தொட்டு இன்று வரையும் அவர்கள் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். இதை, இந்த நாசமாய்ப்போன துரோகம் செய்பவர்கள் உணர்ந்தால் தானே. தோழர்கள் ராமநாதனும் கே. வெங்கடசாமி நாயுடுவும் நமது கட்சியினின்று நீங்கிச் சென்றபோது, இவர்களைக் காந்தியாருக்கு அறிமுகம் செய்த போது ராஜகோபாலாச்சாரியார், அன்று ஹனுமார் ராமனிடம் விபீஷணனை அறிமுகம் செய்து வைத்தது போன்றே செய்தாரே. "ராமநாதன் வந்து விட்டார் பழைய படி அந்த சரணாகதிக்கு நீங்கள் மனமிரங்கி இடம் அளிக்கவேண்டும். ராமர் எப்படி விபீஷணனுக்கு அபயம் அளித்தாரோ அதே போன்று இவருக்கும் தாங்கள் அபயம் அளித்தருளவேண்டும்" என்று.

ராவணனை விட்டு விபீஷணன் நீங்கியதற்கும் சுயமரியாதைக் கட்சியை விட்டு ராமநாதன் நீங்கியதற்கும் ஒப்புதல் காட்டிவிட்டாரே ராஜகோபாலாச்சாரியார். இது போலவே வெங்கிடசாமி நாயுடு விஷயத்திலும் சொன்னார். இந்த இராமாயண சம்பிரதாயம் தானே அன்றுமுதல் இன்று வரைக்கும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

### கீதையை ஆரியர்கள் போற்றுவதேன்?

நீங்களே சிந்தித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் குறளுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறார்கள். கீதைக்கு எவ்வளவு மரியாதை செய்கிறார்கள். அவர்கள் பகவத்கீதையை அச்சுப்போட்டு இனாமாக வழங்கிவருவதும் அதைப்பற்றிப் பெருமையோடு எங்கும் பேசி வருவதும் உங்களுக்குத் தெரியாததல்லவே. இது ஏன் என்று நீங்கள் சிந்தித்ததுண்டா? கிருஷ்ணன் கீதையின் மூலம் நாலு ஜாதி முறை உண்டென்பதையும் அதில் பார்ப்பனர்களே முதல் ஜாதியினர் என்பதையும் கடவுளுக்கும் பெரியவர்கள் பார்ப்பனர் என்ற தத்துவம் இருப்பதோடு எப்படியும் அதர்மம் செய்தவர்களுக்கு மன்னிப்புஉண்டு, வர்ண அதர்மம் செய்பவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்று ஒப்புக்கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம் என்பதை உணருக! வேதாந்திகளுக்கும் பார்ப்பனர்களுக்கும் கீதையில் 1000 வரி தெரிந்திருப்பது ஏன்? குறளில் 2 வரிகூடத் தெரியாதது ஏன்? என்பதையும், சிலர் காவிவேட்டி கட்டிக் கொண்டு திராவிடர்கூடக் கீதைப் பிரசாரம் செய்து வருவது ஏன்? என்பதையும் யோசித்துப்பாருங்கள். கீதை எவ்வளவு அக்கிரமத்திற்கும் முக்காடு போட்டுவிடும் காவியுடையைப் போல். ஏன் கீதைக்குத் தலைவனான கிருஷ்ணனே அக்கிரமத்தின் தலைவன் ஆன காரணத்தால்.

### பித்தலாட்டப் போர்வை கீதை!
### அதற்குப் பெரிய நெருப்பு குறள்!

தோழர்களே! நாம் எதிர்க்கும் நான்கு ஜாதிமுறையைக் கடவுளின் பேரால் வலியுறுத்தத்தான் கீதையும் கிருஷ்ண பஜனையும் என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும்.

கீதை படிப்பவர்கள் எத்தகைய தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பகவானே இதைச் செய்துள்ளபோது சாதாரண மனிதனான நான் எம்மாத்திரம் என்றோ, எல்லாம் பகவான் செயல் என்றோ, நான் ஏன் பார்ப்பான் என்பதைக் கிருஷ்ணனிடம் கேட்டுத் தெரிந்து கொள் என்றோ சுலபமாக பதில்கூறிவிடலாம். ஆனால் குறளைப்படித்தாலோ தர்மத்தின்படி நடக்கவேண்டும். பித்தலாட்டம்செய்ய முடியாது. பித்தலாட்டம் செய்பவரைக் கண்டாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

குறளிலும் இன்றைய நிலைக்குப் புறம்பான கருத்துக்கள் சில இருக்கலாம். அவற்றை மாற்றிவிடவேண்டிய தான். அத்தகைய மாற்றத்திற்கு இடம் தருவதுதான் குறள்.

### மனித சமுதாயத்திற்கே வழிகாட்டி குறள்!

குறளை முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் உட்பட யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். மாம்சம் சாப்பிடுவது மறுக்கப்பட்டிருக்கிறது என்னலாம். காய் கனி தான்யம் இவை அபரிமிதமாகக் கிடைக்குமானால் மாம்சம் தின்ன வேண்டிய அவசியம் தான் என்ன இருக்கிறது.

முகம்மது நபியவர்களால் கூறப்பட்டுள்ள பல கருத்துக்களைக் குறளில் அப்படியேகாணலாம். முஸ்லிம்களுக்கு எதிராக அதில் ஒன்றுமே காணமுடியாது. அது மனு தர்மத்துக்கு உண்மையான விரோதி நூல் என்று திடமாகவே சொல்லலாம். மனுதர்ம சூத்திரங்களுக்கு நேர்மாறான கருத்துக்களைக்கொண்ட குறள் அடிகளை ஏராளமாகத் திருக்குறளிலிருந்து எடுத்துக்காட்டலாம்.

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி நன்னெறியூட்டி நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் எங்கள் குறள், எங்கள் மதக்கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள் என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

எனவேதான் அதன் ஆசிரியரைக் கூட சில மதத்தினர் தம்மவர் என்று உரிமை பாராட்டிக் கொள்கிறார்கள். ஜைனர் தம்மவர் என்று கூறி அவரை மொட்டைத் தலையராகக் காட்டுகிறார்கள். சைவர்கள் அவரைத் தம்மவர் என்று கூறி ஜடாமுடியுடன் விபூதிப் பட்டையுடன காட்டுகிறார்கள். அவரோ எம்மதமும் இல்லாதவராகவே தோற்றுகிறார். ஒரு இடத்தில் 'மயிரும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. மொட்டையும் அடித்துக்கொள்ள வேண்டியதில்லை. யோக்கியனாய்இருக்கவேண்டுமானால்' என்று கூறியிருக்கிறார். அப்படியான பெரியாரை வைணவர்கள் தம்மவர் தான் என்று கூறிக்கொண்டு வடகலை நாமம் போட்டுக் காட்டுகிறார்கள். அவரை ஆள்வாரில் ஒருவராகவும் ஆக்கிவிடுகிறார்கள். அவருக்கு வடகலை நாமம் போட்டது மகாமகாக் கொலைபாதகத்தனமாகும்.

### இராமாயணக் கூத்து ஏன்?

திருவள்ளுவர் தவிர்த்த வேறு யாரையும் மற்ற மதத்தவர்கள் இம்மாதிரி மதிப்பதில்லையே. இதிலிருந்தே தெரியவில்லையா, குறளில் காணப்படும் திராவிடப் பண்பு எத்தகையது என்று. இப்படிப்பட்ட திருக்குறளை விரும்புவதைவிட்டு நம் நாட்டவர்கள் இராமாயணத்தை வைத்துக் கொண்டு கூத்தடிக்கிறார்களே அது நியாயமா?

எவளோ ஒருத்தி சொன்னாளாம். "பண்ணாடைக்குப் பிறந்ததெல்லாம் பந்தம்பிடிக்குது. பண்டாரத்துக்குப் பிறந்ததெல்லாம் மணியம்பார்க்குது." என்று. அதாவது மதிக்கப்பட வேண்டியது மதிக்கப்படாமல் மதிக்கப்படக் கூடாதன மதிக்கப்படுகின்றனவென்று அர்த்தம். மேற்படி பழமொழி எப்படி வந்ததென்றால் முன்பெல்லாம் மிராசுதாரர்கள் கூத்திகளை வைத்துக் கொள்வார்கள். அவர்கள் கூத்தியோடு இருந்தால் அவர்கள் மனைவிமார் ஊர்ப்பண்டாரத்தைத் துணைக்கு வைத்துக் கொள்வார்கள். தாசி வீட்டில் மிராசுதாரர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தாசிமக்கள் தொழிலையொட்டி கோவிலில் பந்தம் பிடிக்கும். ஆனால் மிராசுதாரர்பேரால் பண்டாரத்திற்கு அவர் வீட்டில் பிறந்த குழந்தைகள் மிராசுபார்க்கும் என்று கற்பனைக் கதை சொல்லுபவர்கள் இதைக் குறிப்பது தான் அப்பழமொழி. அதுபோல் உண்மைத் திராவிடன் தீட்டிய திருக்குறள் குப்பையிலே கிடக்க, திராவிடத் துரோகி தீட்டிய ராமாயணமும் ஆரியர் தீட்டிய கீதையும் அதிகாரத்தில் இருந்து வருகிறது.

### ஏன் இந்தத் திறப்புவிழா?

இந்த இழிதன்மையை மானமற்ற தன்மையை கவலையற்ற தன்மையை உங்களிடம் முறையிட்டுக் கொள்ள வேண்டித்தான் வள்ளுவர் படத்தைத் திறந்து வைக்க ஒப்புக்கொண்டேன். குறளுக்குள் நான் இன்று புகவில்லை. மற்றொரு சமயம் எடுத்துக் காட்டுகிறேன்.

### ஹிந்து மரத்தில்தான் 'தாழ்த்தப்பட்ட' கிளை!

தாழ்த்தப்பட்ட வகுப்பார் உண்

வேண்டும், ஹிந்துக்கள் இருப்பதால் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பாரென்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதை.

குறள் ஹிந்து மதக் கண்டனப் புத்தகம் என்பதையும் அதுசர்வமதத்திலுள்ள சத்துக்களை எல்லாம் சேர்த்து எழுதப்பட்டுள்ள மனித தர்ம நூல் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும்.

விரும்பிப்படித்து அதன்படி நடக்க வேண்டும். ஒவ்வொருவனும் தான் ஹிந்துவல்ல திராவிடனே—திருக்குறளனே என்று கூறிக்கொள்வதில் பெருமையடைய வேண்டும். விபூதியையும் நாமத்தையும் விட்டொழிக்க வேண்டும். புராணங்களைப் படிக்கக் கூடாது. என்ன மதம் என்றால் குறள் மதம், மனித தர்ம மதம் என்று சொல்லப்பழகவேண்டும்.

யார் எதைச் சொல்லிய போதிலும், எது எத்தன்மையுடையதாயிருப்பினும், ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்த்து ஆராய்ச்சி செய்து பார்த்துப் பிறகே எது உண்மை என்பதை முடிவு செய்யவேண்டும். சுய அறிவே பிரதானம் என்ற, ''வாலறிவன் நற்றாள்'' என்ற வள்ளுவர் கருத்துப்படி அனைவரும் நடக்க வேண்டும். உருவ வழிபாட்டை ஒதுக்கிவிடவேண்டும்.

## முஸ்லிம்களுக்கு விண்ணப்பம்!

முஸ்லிம் தோழர்களுக்கு ஓர் விண்ணப்பம். உங்களை ஏனோ எங்களுடன் நன்கு சேர ஒட்டாமல் உங்கள் தலைவர்கள் தடுத்து வருகிறார்கள். ஜின்னா சாகிப் ஒரு காலத்தில் முஸ்லிம்கள் யாரும் வேறு கட்சியில் சேரக் கூடாது என்று கூறினார் என்றால் அதற்கு அர்த்தம் இருந்தது. முஸ்லிம்களின் லட்சியமான பாகிஸ்தானையடைய எல்லா முஸ்லிம்களும் ஒரே கட்சியின் கீழிருந்து வேலை செய்ய வேண்டும் என்பதற்காக அவர் அவ்விதம் சொல்லியிருந்தார். அப்பொழுது நானும் முஸ்லிம் கட்சியிலிருந்தேன்! பாகிஸ்தான் பெற்றாகி விட்டது. எனவே அவர் கூறியது காலாவதியாகி விட்டது. லிமிட்டேஷன் பார் ஆகிவிட்டது. இனி முஸ்லிம்கள் தங்களின் பாதுகாப்புக்காக ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்துகொள்வதுதான் நல்லது. இன்றுள்ள இம்மாகாணமுஸ்லிம் தலைவர்கள் சொற்ப சலுகைகளுக்காகவும், பயத்துக்காகவும், சுயநலத்திற்காகவும் காங்கிரஸ்காரர்களின் காலடியில் இருந்துகொண்டு வருகின்றனர். தமக்குக்கிடைக்கும் சலுகைக்காக முஸ்லிம் இனத்தையே காட்டிக் கொடுக்கத் துணிந்து அவர்களைக் கோழைகளாக்கி விட்டனர். இதை முஸ்லிம் பாமர மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். காங்கிரஸுடன் சேர்ந்துகொள்வதாயிருந்தால் தாராளமாய்ச் சேர்ந்துகொள்ளுங்கள். நாங்கள் வேண்டாமென்று கூறவில்லை. 100-க்கு 90-பேராயுள்ள எங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களா 100-க்கு 7-பேரான உங்களுக்கு வளைந்து கொடுக்கப்போகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை இன்னும் நாங்கள் உங்களை எங்கள் உடன்பிறந்தவர்களாகத்தான் கருதி வருகிறோம். நீங்களும் குறள் மதக்காரர்கள் என்றே கருதுகிறோம். நாங்களும் உங்களைப்போல் ஹிந்து மதத்தை வெறுக்கிறோம் என்பதோடு குறளை ஒருபோதும் வெறுப்பவர்கள் அல்ல. ஒன்றுமே முடியாதுபோனால் உங்களைப் போன்று குல்லாயாவது போட்டுக்கொள்ளலாம் என்றுதான் நாங்கள் கருதியிருக்கிறோம்.

எங்கள் இனத்தவர் நீங்கள் என்பதற்காக உங்களை இந்த அளவுக்கு அளவளாவும், ஆதரிக்கும் எங்கள் கழகத்தில் வேண்டுமானாலும் சேருங்கள். அல்லது வடநாட்டானால் பலகோடி செலவிட்டு பத்திரிகைகளைக்கொண்டு தீவிர பிரசாரம் செய்து ஹிந்துக்களைத் தூண்டிவிட்டு உங்களைக் கொள்ளையடிக்க நினைக்கும் பார்ப்பனர்களோடாவது சேர்ந்துகொள்ளுங்கள். சேருமுன் கொஞ்சம் தீர்க்க யோசித்துவிட்டு மட்டும் சேருங்கள். திருவண்ணாமலையும், ஈரோடும், திருநெல்வேலியும் உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்.

## கிறிஸ்தவர்களே! நீங்களும் சிந்தியுங்கள்!

முஸ்லிம்களுடைய குறைவான எண்ணிக்கையுடைய கிருஸ்தவர்களுக்கும் சொல்கிறேன். கிருஸ்தவர்களாகி விட்டதாலேயே நீங்கள் உயர்ந்தவர்களென்று கருதிக்கொண்டு விடாதீர்கள். நீங்களும் குறள் மதக்காரர்கள். பைபிளுக்கு விரோதமாக குறளில் ஒன்றும் கிடையாது. பார்ப்பனர்களின் தயவுக்காகவேண்டி சுயமரியாதையை இழந்துவிடாதீர்கள். உங்கள் நன்மையைப் பாதுகாத்துக் கொள்வதாயிருந்தால் ஜாதி சமய பேதமின்றிப்பாடுபடும் திராவிடர் கழகத்தில் சேருங்கள். திராவிடர்கழகம் திருவள்ளுவர் குறளைப் பின்பற்றி நடந்துவரும் கழகம். இந்நாட்டில் மனுதர்மம் ஒழிந்து மனிதத்தன்மை ஏற்படப் பாடுபட்டு வரும் கழகம். அதற்குக் குறள்தான் வழிகாட்டி. எந்த முன்னேற்றத்திற்கும் விரோதமில்லாமல் பணியாற்றி வரும் கழகம் என்பதை நீங்கள் உணர்ந்து ஆன எல்லா உதவியையும் அதற்களித்து ஆதரியுங்கள்.

---

# புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0
5. திராவிடர்-ஆரியர் உண்மை 0—2—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

---

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஒருவர்பின் ஒருவராகக் கிளம்பி வேகமாக வெளியே சென்றனர். சுற்றத்தாரில் ஒருவர்கூட அங்கு நிற்கவில்லை. ஆதலால் அழுகுரல் மழை பெய்து ஓய்ந்தது போல் திடீரென்று நின்று விட்டது.

பந்தசாமி பாசத்தின் பெற்றோர்களை நோக்கி மீண்டும் ஒரு முறை 'யாரேனும் பாசத்திற்காக உயிர்கொடுக்கத் தயாரா?' என்று கேட்டார்.

அப்போது பாசத்தின் தாயார் உடன்கட்டையின் தாயாரை (மாமியாரை) நோக்கி 'அடிச்சாங்கிழமே! நீயேண்டி இன்னமும் தயங்கிக் கொண்டிருக்கே? உன் உயிரைக் கொடுத்து நீ ஒழிந்து போயேண்டி! என் மகன் பிழைத்து எழுந்திருக்கட்டும்' என்றாள்.

அதற்கு அந்தப்பாட்டி 'அடி விடியாமூஞ்சிக் கழுதை! நீ இந்த வீட்டில் கால் வைத்த நாள் முதலாய் ஒண்ணுமே உருப்படலேயேடி? நீ ஒழிந்து போயேண்டி! என் பேரன் பிழைத்தெழுந்திருக்கட்டும்' என்றாள்.

இப்படியாக, உடன்கட்டை உள்பட பாசத்தின் பெற்றோர்களும், சுற்றத்தாரும் ஒருவரை ஒருவர் திட்டித் திணிக்கப்பார்த்தனரே ஒழிய, ஒருவரும் பாசத்திற்கு உயிர் தருகிறேன் என்று பந்தசுவாமியின் முன் வந்து நிற்கவே இல்லை.


கடைசியாக, பந்தசாமியும் வந்த வழியே திரும்பிப் போய் விட்டது. பாசத்தைப் பாடையில் வைத்து நான்கு பேர் தூக்கிக்கொண்டு மயானத்திற்குச் சென்றனர். பெற்றோரும், சுற்றத்தாரும் அழுது கொண்டுதான் பின்னே சென்றனர்.

பாடையிலிருக்கும் பாசத்திற்கு எல்லா விவரமும் தெரிந்தது. ஆனால், பெற்றோர்கள் இன்னமும் ஏன் அழுகிறார்கள் என்பது தான் தெரியாமலிருந்தது.

மயானத்தை அடைந்ததும் பாசத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்த முனைந்தனர். பாசம் பயந்து நடுங்கினான். ஆனால், எழுந்திருக்கவோ, பேசவோ முடியவில்லை. அந்தச் சமயத்திலும் அங்கு பந்தசாமி வந்தார்.

அவரைக் கண்டதும் எல்லோரும் பயந்து ஓடிவிட்டனர். நாழிகையும் அறுபது ஆகிவிட்டது; பாசம் மயக்கம் ஒழிந்து எழுந்தான்; பந்தசாமி பாதத்தில் வீழ்ந்து தன்னை நெருப்பிலிருந்து காப்பாற்றியதற்காகத்தன் உள்ளப் பூர்வமான நன்றியைச் செலுத்திவிட்டுத் தன் தோல்வியை ஒப்புக் கொள்வதற்காகக் காரணியைத் தேடி ஓடமுனைந்தான். அப்போது அவனைத்தடுத்து நிறுத்திய பந்தசாமி தன் வேடத்தைக் களைந்து சுய உருவத்தைக் காட்டியது. ஆம். பந்தசாமியாக நடித்தது காரணியேதான்! அவளைக் கண்டு ஆச்சரியப்பட்ட பாசம் 'பந்தபாசம்...?' என்றான்.

அதற்குக்காரணி 'அருத்தம் அற்றது' என்று அந்த வாக்கியத்தை முடித்தாள். பிறகு இருவரும் திருமணம் செய்து கொண்டு இனிது வாழ்ந்தனர்.




# குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

க்ச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE